Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
(C/704)
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 10 செவ்வாய்க்கிழமை (24.05.2011) பக்கங்கள் 16 ஓசை - 237




கனிமொழி கைது தி.மு.க. அம்மணம் (14)



பிரபாகரனுக்கும் அடைக்கலம் வழங்க நோர்வே விரும்பியது (10)



எடையைக் குறைக்க கண்களை மூட வேண்டும் (11)



தாலிக்கொடியை தவறவிட்டு 30 பவுண் நகைகளுடன் தப்பியோட்டம் (05)

# போர்க் குற்ற அறிக்கை தயாரிக்க அரசாங்கமே தகவல் வழங்கியது

## புதுக்கதை கூறுகிறார் பொன்சேகா

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக போர்க் குற்ற அறிக்கை தயாரிப்பதற்கு அரசாங்கமே ஐ.நா.வின் நிபுணர்குழுவினருக்கு தகவல் வழங்கியது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம்சாட்டியுள்ளார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கில் நேற்று நீதிமன்றில் சாட்சியமளித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

சரத் பொன்சேகா அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கைக்கு எதிராகப் போர்க்குற்ற அறிக்கை தயாரிப்பதற்கு அரசாங்கமே நிபுணர்குழுவிற்கு தகவல் வழங்கியுள்ளது என்பதை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஊடாக தனக்கு அறியக்கிடைத்ததாகவும், இந்த சூழ்ச்சியின் ஒரு கட்டமாகவே தன்னை சிறைப்படுத்தியுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை ஒலிபெருக்கி மூலம் சரத் பொன்சேகாவிற்கு சாட்சியமளிக்க ஏற்பாடு செய்து கொடுக்கும் போது மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.தே.கட்சிக்கு மாற்று செயற்குழு

## ரணிலுக்கு புதிய தலைவலி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மீது அதிருப்தி கொண்ட அதன் அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து மாற்றுச் செயற்குழு ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் திரை மறைவில் இடம்பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவே முன்னின்று மேற்கொண்டுள்ள இந்த மாற்று செயற்குழுவின் தலைமைப் பொறுப்பையும் அவரே ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஐ.தே.க.வின் இந்த மாற்று செயற்குழுவில் மாகாணசபை உறுப்பினர்கள் தொகுதி அமைப்பாளர்கள் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் புத்திமான்கள் என நூறு அங்கத்தவர்கள் இடம்பெறுவதாகவும் மேற்படி செயற்குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.



# சரிந்து வரும் கூட்டமைப்பு ஏகப்பிரதிநிதி ஆகமுடியாது

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக 113,000 வாக்குகளைப் பெற்றுத் தந்ததாக பெருமை பேசினர் கூட்டமைப்பினர். ஆனால், அதன்பின் மூன்று மாதங்களில் வந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களில் 63,000 வாக்குகளை மட்டுமே அவர்களால் பெறமுடிந்தது. 9 ஆசனங்களில் கூட்டமைப்பு பெற்றது 5 ஆசனங்கள் மட்டுமே. இந்நிலையில் கூட்டமைப்பு எப்படி தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ள முடியும்? தீர்வு தொடர்பாக அரசு அவர்களுடன் மட்டுமே பேச வேண்டும் என்று எப்படிக் கேட்க முடியும்.

என்று கேள்வி எழுப்பியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்த

(15ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த வெற்றியின் இரகசியம் அனுபவப் பகிர்வு மகாநாடு

## சீனக்கம்பனிகள் அனுசரனை

(கொழும்பு)

யுத்த வெற்றியின் அனுபவப் பகிர்வு மகாநாட்டுக்கு சீனாவின் ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் அனுசரணை வழங்க முன் வந்துள்ளன.

கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியுள்ள மேற்படி "யுத்த வெற்றியின் அனுபவப் பகிர்வு "தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் சீனாவின் இந்த முன்னணி ஆயுத தளபாட உற்பத்தி நிறுவனங்களின் தயாரிப்புக்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அந்தவகையில், சீனாவின் முன்னணி நிறுவனங்களான (15ஆம் பக்கம் பார்க்க)

# உழைக்கும் படையணி நாட்டின் இன்றைய தேவை

## பசில் ராஜபக்ஷ கூறுகிறார்



(கொழும்பு)

நவீன உலகின் சவால்களை எதிர் கொள்ள நல்லொழுக்கமிக்க பயிற்றப்பட்ட உழைக்கும் படையணி ஒன்று நாட்டுக்குத் தேவை எனப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேல் மாகாண தேசிய இளைஞர் படையணி வீரர்கள் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் நிகழ்வின்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்தனகல தேசிய இளைஞர் படையணி விளையாட்டரங்கில் (16ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.சிறைக்கூடத்தில் கைதிகள் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வழக்குகள் அனைத்தும் நீதிமன்றினால் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னரும் தடுப்புக்காவலில் தொடர்ந்தும் வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் எட்டுப்பேர் யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இக் கைதிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை விசாரணை

(15ஆம் பக்கம் பார்க்க)

# துப்பாக்கி ரவைகள் மீட்பு

(கொழும்பு)

மன்னார் பெரிய தம்பனை பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

பெரிய தம்பனைக்குளம்

(15ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய கடற்படையால் இலங்கை மீனவர்கள் கைது

(கொழும்பு)

தென்னிலங்கை தெய்வேந்திரமுனை பிரதேசத்தில் இருந்து கடந்த 19ஆம் திகதி மீன்பிடித் தொழிலுக்காக சென்ற 10 மீனவர்கள் இந்திய கடலோரக்காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென்னிந்திய கடற்பிராந்தியத்தில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட நிலையிலேயே இவர்கள் பல்தினப் படகொன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களை விடுவிப்பது குறித்து இலங்கை மீன்பிடித் துறை அமைச்சின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாக அதன் செயலாளர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட தெய்வேந்திரமுனை பிரதேச மீனவர்களுடன், இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களின் எண்ணிக்கை 41 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 8 மீனவப்படகுகளும், இந்திய பாதுகாப்பு தரப்பினர் வசம் உள்ளது.

# கைதடியில் துப்பாக்கிச் சூடு தப்பியோடிய இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியில் அமைந்துள்ள சித்த மருத்துவத்துறை பெண்கள் விடுதியினுள் நேற்று அதிகாலையில் புகுந்த இளைஞர் மீது படையினர் நிகழ்த்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் போது, குறித்த இளைஞர் படுகாயமடைந்ததுடன், படையினரால் அவர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். கைதடி தெற்கைச் சேர்ந்த சந்திரலிங்கம் டர்சிகன் (வயது-22) என்ற இளைஞரே

(15ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக மாணவருக்குப் பயிற்சி

# வைபவ ரீதியாக நேற்று ஆரம்பம்



(கொழும்பு)

பல்வேறு மட்டத்திலிருந்தும் கிளம்பிய எதிர்ப்பையும் தாண்டி பல்கலைக்கழக மாணவர்களுக்கான முதற்கட்ட தலைமைத்துவப பயிற்சி, படைமுகாம்களில் நேற்று ஆரம்பமாகின.

அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் 3000 மாணவர்கள் ஒன்றுகூடிப் பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன. ஏனைய பயிற்சி நிலையங்கள் தொலைத தொடர்பாடல் வசதிகளால் இணைக்கப்பட்டன.

18 இராணுவ முகாம்கள், இரண்டு கடற்படை முகாம்கள், இரண்டு வான்படை முகாம்கள், நான்கு தொண்டர்படை முகாம்கள், இரண்டு பொலிஸ் நிலையங்கள் என்று முதலாம் கட்டமாக மொத்தம் 28 பயிற்சி நிலையங்களில் பத்தாயிரம் மாணவர்களுக்கு இப்பயிற்சி இடம்பெறுகின்றது.

அடுத்தகட்டமாக மிகுதி மாணவர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் புதிய திட்டத்தால் சிறந்த வருங்காலத் தலைவர்களை உருவாக்க முடியும் என ஆரம்ப நிகழவில கலந்துகொண்ட ஜனாதிபதி தெரிவித்தார். உயர் தரத்தில் கல்விகற்கின்ற நான்கு இலட்சம் மாணவர்களில் 5 வீதம் மட்டுமே இந்தப் பயிற்சியைப் பெறுகின்றனர்.

இந்தப் பயிற்சிக்காக 200 மில்லியன் ரூபா அரசு செலவு செய்கின்றது. இது ஆயுதப் பயிற்சி அல்ல, தலைமைத்துவப் பயிற்சி மற்றும் ஆக்கபூர்வமான பயிற்சி என தெரிவித்த ஜனாதிபதி இவ்வருடம் முதல் பல்கலைக் கழகத்தில் தெரிவாகும் மாணவர்கள் அனைவருக்குமான அறிமுக நிகழ்வு எனவும் தெரிவித்தார்.

## சட்டவிரோத மணல் அகழ்வு

## அரியாலை வாசி அகப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் பத்தாயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்ததுடன் சட்டவிரோதமாக ஏற்றிவரப்பட்ட மண்ணும் பறிமுதல் செய்யப்பட்டது.

நேற்று யாழ்.அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமாகக் கன்ரர் ரக வாகனத்தைப் பயன்படுத்தி குறித்தநபர் மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் யாழ்.பொலிசார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையில் இவர் கைதுசெய்யப்பட்டதுடன், யாழ்.பதில் நீதிபதி பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

இவரை விசாரித்த நீதிபதி தண்டப்பணமாக பத்தாயிரம் ரூபா செலுத்துமாறும் அவர் ஏற்றிவந்த மணலைப் பறிமுதல் செய்யுமாறும் யாழ். பொலிஸாருக்கு அறிவுறுத்தித் தீர்ப்பளித்தார். (பா)

## அபராதம் விதிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனை மேற்கொண்ட பொதுச் சுகாதார பரிசோதகர் அப்பிரதேசங்களில் உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுப் பொருட்களை உற்பத்திசெய்து அவற்றை களஞ்சியப்படுத்திய இரு வெதுப்பக உரிமையாளர்கள் மீது சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து குறித்த இருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் அபராதத்தைச் செலுத்தத்தவறின் 3 மாத சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் சான்றுப பொருட்களையும் அழிக்குமாறு தெரிவித்தார். (11)

## வன்முறையற்ற தொடர்பாடல் விசேட கருத்தமர்வு

(குருநகர்)

யாழ்.சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகம் வவுனியாக் கிளையூடாக அக்கல்விச்சாலைகளில் மாணவர்களுக்கான சமாதானக் கல்வி மற்றும் வன்முறையற்ற தொடர்பாடல் கருத்தமர்வுகளை நடத்தவுள்ளது.

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு பணியகத்தால் யாழ். மாவட்டத்திலும் பரவலாக மேற்படி கருத்தமர்வுகளை நடத்திக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை ஒரே நேர காலத்திற்குள் இரு கல்லூரிகளில் கருத்தமர்வுகள் நடத்தப்பட இருப்பதாக ஒருங்கிணைப்பாளர் எ.சுதாகரன் தெரிவித்தார். வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் தரம் 5,6,7,8 மாணவ, மாணவிகளுக்கும், வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் தரம் 9,10,11,12,13 மாணவ, மாணவிகளுக்கும் கருத்தமர்வுகள் நடைபெறும். நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம், முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்களுடன், வவுனியா சித்திவிநாயகர வித்தியாலயம் மற்றும் வ/இராஜேந்திரன்குளம் அ.த.க.பாடசாலை, வ/அறபா வித்தியாலயம், விபுலானந்தாக் கல்லூரி ஆகியனவும் பங்குபற்றுகின்றன.

## திருட்டுப் போகும் கடல் உணவுகள்

(ஆனைக்கோட்டை)

கேரதீவு புதிய பாலத்தடியில் கடலருகே இறால் பிடிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள இறால் கூடுகள தூக்கிவீசப்பட்டு இறால்கள் களவாக எடுத்துச் செல்லப்படுவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் இத்தொழிலை நம்பியிருக்கும் மீனவர் குடும்பங்கள் வாழ்வாதார ரீதியாகப் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்குவதாக அவர்கள் மனவேதனையுடன் தெரிவிக்கின்றர். (104)

## அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை ஐவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சேவையிலுள்ள கனிஷ்ட ஊழியர்களை அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு உயர்த்துவதற்காக 2010 ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளது.

இப்பரீட்சைப் பெறுபேறுகளின்படி யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து பேருக்கு இந்நியமத்திற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிக் கடிதங்கள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பு - 7, சுதந்திர சதுக்கத்திலுள்ள அரசாங்க திணைக்கள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டவர்கள் விபரம் வருமாறு.

எஸ்.சித்திரா - யாழ்ப்பாணம், எம்.ஜே.எம்.பெனடிக்றசன் - கோப்பாய், யோசப்வின்சன் பிறிற்ரோ - கொக்குவில், எஸ்.கஜேந்திரன் - மானிப்பாய், எஸ்.நிசாந்த - யாழ்ப்பாணம். (பா)

## தண்டம் அறவீடு

(சாவகச்சேரி)

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய குற்றத்திற்காக அச்சுவேலியைச் சேர்ந்த நபர் ஒருவரைச் சாவகச்சேரிப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நேற்றையதினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா, குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து குறித்த நபருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் செலுத்தத்தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (11)

## யாழ்ப்பாணம் மாநகர சபை

**வெற்றுக்காணி பொறுப்பேற்றல் சம்பந்தமான அறிவித்தல்**

**ஆதன இல - 315, 315/1 சி.பொன்னம்பலம் வீதி, வட்டாரம் 17.**

**பாழ்ப்பாணம் சி.பொன்னம்பலம் வீதி, வட்டாரம் 17இல் ஞானம்ஸ் ஹோட்டலிற்கு அருகாமையில் ஆதன இல: 315, 315/1 இற்குரிய ஆதனங்கள் இடிபாடுகளுடன் கூடிய வீடாகவும், பற்றைக் காணியாகவும் காணப்படுகின்றன. இவ்வாதனங்கள் அமைந்துள்ள பாதை தற்போது மக்கள் போக்குவரத்திற்காக அனுமதிக்கப்பட்டிருப்பதனால் கூடுதலான மக்கள் இப்பாதையூடாகப் போக்குவரத்துச் செய்துவருகின்றார்கள். இவ்வாதனம் இடிபாடுகளுடன் சேதமடைந்து பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதனால் மக்கள் போக்குவரத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன், பராமரிப்பின்றி பற்றைகள் வளர்ந்து சுகாதாரத்திற்கு கேடு விளைவித்தும், நுளம்புப் பெருக்கத்திற்கு ஏற்றவகையிலும் இருப்பதனால் இதனை யாழ்ப்பாணம் மாநகரசபை 2007ஆம் ஆண்டு நுளம்புப் பெருக்கத் தடைச்சட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளது.**

**இவ்வாதனங்கள் மீது எவராவது உரிமை கொண்டாட இருப்பின், 10.06.2011ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக கொள்கின்றேன். தவறின் ஆதனம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு பரிபாலிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.**

**திருமதி.யோ.பற்குணராசா,**
**முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.** (C/733)


## பதவி வெற்றிடங்கள்

**01) கணக்குப் பதிவாளர்**

**கல்வித் தகைமை :-** க.பொ.த.(உ/த) பரீட்சையில் கணக்கியலில் விசேட சித்தியும், வர்த்தகம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயது :-** 30 - 50 வருடங்கள

**ஏனைய தகைமைகள்:-** ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவராகவும், மேற்கூறப்பட்ட பதவிக்கான முன் அனுபவம் மற்றும் கணினி அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**02) ஒப்புநோக்குநர்**

**கல்வித் தகைமை :-** க.பொ.த (உ/த) பரீட்சையில் தமிழில் விசேடசித்தி உட்பட மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

**வயது :-** 25 - 50 வருடங்கள

பத்திரிகைத்துறையில் ஒப்புநோக்குநராகக் கடமையாற்றியமுன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவராக இருத்தல்வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் (25.05.2011) ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும். அத்துடன் கடித உறையின் மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

**தினமுரசு,**
**ஆளணி முகாமையாளர்,**
**373, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## மனோதத்துவ வைத்தியம்

GENERAL PSYCHOTHERAPHY

**யாழ்ப்பாணத்தில் 28.05.2011 - 01.06.2011**

**5 நாட்கள் மட்டுமே**

**அகில உலகெங்கும் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களிற்கு அறிமுகமான பிரபல மனோதத்துவ Dr.P.ஆறுமுகம அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இல்லற வாழ்க்கைக்குப் புத்துயிர் கொடுத்துப் பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.**

**யாழ்ப்பாணத்தில் குழந்தை இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு.**

★ பதிவு செய்தவர்களும், புதிதாகப் பதிய விரும்புபவர்களும உடன் தொடர்புகொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**கமல்ரூரிஸ்ற் இன்,**
**392/A மணிக்கூட்டு கோபுர வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல்)**
**தொ.பே.இல - 0214922403.**
Hot line - **0719315664, 0777569205.**

(C/732)

படிப்பு என்பது ஏட்டோடு மட்டும் நின்று விடக்கூடாது புத்திக்கும், சிந்தனைக்கும் இடம்கொடுத்து அந்த சிந்தனையின் மூலம் நமக்குத் தற்போதும், பிற்காலத்திலும் நம்வாழ்க்கைக்கு உதவியாயிருக்கக் கூடியமுறையில் கல்வி அமையவேண்டும்.
- ஸ்ரீஜயேந்திரர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## சூளுரைத்து வாழ்வு வருவதில்லை

நம்மைப்பற்றி நமக்கிருக்கும் நல்லபிப்பிராய நினைவைத் துறக்கமுடியாதிருப்பதும், நமது பிரச்சினைகளுக்கொரு காரணம் என்று உளவியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள்.

இதனால் மற்றவர்களுடைய துன்பங்கள், அன்றாட வாழ்க்கைப்பாடுகள், ஓலங்களை நம் நினைவுக்குள் போடமுடியாதவாறு நமது துன்பங்களும், நமது இழப்புக்களுமே பெரிதாய் நம் நினைவில் எப்போதுமிருக்கின்றன. மற்றவர் பாடுகளைப் பார்க்கமுடியாதவாறு நம் துன்பங்களைப் பெரிதாக்கி முன்னால் பிடித்துக்கொள்கிறோம்.

நாம்தான் உலகிலேயே மிகமிகத் துன்பப்படுபவர்களாகவும் மற்றவர்களெல்லாம் நமக்குத் துன்பம் தருபவர்களாகவும் எண்ணிக்கொள்கிறோம்.

இது எங்களுடைய எந்தத் தவறுகள் நம் துயர்களுக்குக் காரணமாகியிருக்கும் என்கிற திசையில் நம்மைச் சிந்திக்கவிடாமல் தடுத்து விடுகிறது.

உண்மையில் மற்றவர்களால்தான் துன்பம் என்ற சிந்தனையில் நம் பிரச்சினை தீர வழி பிறக்கும் என்று சொல்வதற்கில்லை. நம்மிடமுள்ள பிழைகளைக் கண்டுகொண்டால் ஒருவேளை வழிகிடைக்கக்கூடும். ஏனெனில் மற்றவர்களுடைய தவறுகளைத் திருத்துவது நம் கையில் இல்லை. ஆனால் முயன்றால் நம் தவறுகளை நாம் திருத்திக்கொள்ள முடியும்தானே!

இங்குள்ள ஏனைய சமூகங்களும் சரியானவை இல்லை, சர்வதேச நாடுகளும் சரியானவை இல்லை என்றால் நாமென்ன செய்ய முடியும்? இந்நாட்டில் ஆட்சிக்குவரும் அரசாங்கம் எதுவும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை வைக்கப்போவதில்லை என்ற சங்கதியையும் மேடைக்கு மேடை தெரிவித்தாகி விட்டது. இனியென்ன? மாற்றுவழி மறுத்தான் வழி என்ற மாயமான சூளுரைகளைச் சொல்லியே காலத்தை ஓட்டவேண்டியதுதானா?

'எப்போதும் நாமே சரி' என்ற நினைப்பின் முடிவாய் நாம் வந்து நிற்கவேண்டிய முட்டுச் சந்து இதுதான்!

நம்மிடமும் பிழை இருக்கலாமல்லவா? என்று யோசிக்கமுடியும்போதுதான் மற்றவர்களுடனான உரையாடலும், இணக்க சமிக்ஞைகளை வெளிப்படுத்துவதன் வழி இணங்கவைத்தலும் சாத்தியமாகும்.

அவர்களிற் பெரும்பான்மையோரது நல்லெண்ணத்திலும் மனிதத் தன்மையிலும் நம்பிக்கை கொண்டால்தான் நாம் நமது வீம்பை விட்டு இறங்க முடியும். நமது தவறுகளுக்காக – அவை அவர்கள் செய்ததைவிட சிறியவையாகவே இருந்துவிட்டுப் போகட்டும்! – நாமே முதலில் மன்னிப்புக் கேட்டும், நல்லிணக்க விருப்பதை வெளிப்படுத்தியும் நன்னயம் செய்யமுடியும்.

நம்மிடம் மட்டுமே 'சரி' இருக்கிறது, நாமே பாதிக்கப்பட்டவர்கள், எனவே உலக நாடுகள் மிரட்டியோ அல்லது கனவில் கடவுள் வந்து மிரட்டியோ சிங்கள அரசு நமக்குரிய தீர்வை தட்டில் வைத்துத் தந்துவிட வேண்டும் என்று காத்திருப்பதன் முட்டாள்தனம் இன்னுமா நமக்குப் புரியவில்லை.

மனிதர்கள் என்ற வகையில் நம்மையும் மற்றவர்களையும் நாம் நம்புவோமாக இருந்தால் வெறுப்பையும் வீம்பையும் விட்டுவிட்டு அவர்களிடம் செல்ல முடியும். நம் பிரச்சினைகளையும் நல்லிணக்கத்தையும் அவர்களோடு பகிரமுடியும்.

அரசியலாளர்கள், தலைவர்களுடன் மட்டுமல்லாது அனைத்துத் தரப்பு மக்களுடனும் நாம் நம்மைத் திறந்து பேசவேண்டிய தேவை இருக்கிறது. அதன் மூலமே நமக்குப் புதிய வழிகள் திறக்கக் கூடும்.

- ஆசிரியர் -

# இந்து நாகரிக பாட ஆசிரியர் கைநூல் இரண்டு வருடமாகியும் கிடைக்கவில்லை

## ஆசிரியர்கள், மாணவர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப்பாடசாலைகளிற்கு தரம் 13 இல் இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களிற்குரிய இந்துநாகரிக பாடத்திற்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி இதுவரை கிடைக்கப்பெறவில்லையென ஆசிரியர்கள் விசனமும் ஆதங்கமும் அடைந்துள்ளனர்.

இதனால் இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் பரீட்சை எழுதவுள்ள இந்துநாகரிகம் கற்கும் மாணவர்களைத் தகுந்த முறையில் பரீட்சைக்குத் தயார் செய்து அனுப்பிவைக்க முடியாதுள்ளதாகவும், இதனால் மாணவர்கள் பாதிப்படையலாம். எனவும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். கல்வியமைச்சின் பாடநூல் வெளியீட்டுப்பிரிவும், தேசிய கல்வி நிறுவகமும், ஆசிரியர்களிற்கான அறிவு ரைப்பு வழிகாட்டியினை தயாரித்து வருட ஆரம்பத் திலேயே பாடசாலைகளிற்கோ, வலயக் கல்வி அலுவலகங்களிற்கோ அனுப்பிவைக்கும் நடைமுறையுள்ள போதும் இருவருடங்கள் சென்றும் இதுவரை இப்பணி யாழ். மாவட்டப் பாடசாலைகளில் செய்து முடிக்கப்படவில்லை.

2012ஆம் ஆண்டு பரீட்சைக்குச் செல்லும் மாணவர்களைத்தயார் படுத்துவதற்காயினும், இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியினைப்பெற்றுத்தரவேண்டும் எனச் சம்மந்தப்பட்டவர்களை ஆசிரியர்கள் வினயத்துடன் கேட்டுக்கொண்டுள்ளனர். (06)

## கடல்மார்க்கமான வெளிநாடு; இன்று விசேட கலந்துரையாடல்

(மன்னார்)

தடைசெய்யப்பட்டுள்ள கடல் மார்க்கமாக வெளிநாடு செல்வதால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வேத நாயகம் தலைமையில் நாளை காலை 10 மணிக்கு மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் கடல் மார்க்கமாக மக்கள் வெளிநாடு செல்ல முயலுகின்றனர். இதனால் ஏற்படும் உயிரிழப்புக்கள் ஏனைய பிரச்சினைகள் சொத்துக்களை விற்று செலுத்திய பணஇழப்புக்கள் போன்ற விடயங்களைத் தவிர்ப்பது தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

இலங்கைக்கான அவுஸ்திரேலியா தூதுவர், குற்றத் தடுப்பு புலனாய்வுத்துறை உயர் அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## வகுப்பு ஆரம்பம்

(யாழ். நிருபர்)

ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்தமடத்தில் திருமுறைப் பண்ணிசை வகுப்புகள் சனி ஞாயிறு தினங்களில் காலை 9.30 மணிமுதல் நடைபெற்றுவருகின்றன. இப்பண்ணிசை வகுப்புகள் கலாபூஷணம் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனினால் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆர்வமுடையோர் ஸ்ரீ சிவகுருநாதகுருபீட வேதாந்த மடத்துடன் தொடர்புகொண்டு கற்கைநெறியில் இணைந்து கொள்ளமுடியும் என பீடாதிபதி ஸ்ரீமத். வேத வித்தியாசாரா சுவாமிகள் தெரிவித்துள்ளார். (10)

## வாழ்வாதாரத்தை மேம்படுத்த கால்நடைகள் வழங்கல்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி கரைச்சி கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் 180 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கால்நடைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஐ.ஓ.எம். நிறுவனத்தின் நிதியுதவியுடன் நல்லின கால்நடைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கால்நடைகளும் 32 ஆயிரம் ரூபா பெறுமதியான கொட்டகைகளையும் அமைத்துக் கொடுப்பதுடன், கால்நடைக்கான ஆயிரம் ரூபா காப்புறுதி செய்யப்படுவதுடன் கால்நடைகளுக்கான புல் வளர்ப்பு என்பவற்றுக்காகவும் மொத்தமாக ஒரு பயனாளிக்கு 90 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன. இதில் முதற்கட்டமாக கால்நடைதீவனத்துக்கான புல் வளர்த்தல், கொட்டகை அமைத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (110)

## குண்டும் குழியுமாக 780 ஆம் இலக்க வீதி

(வேலணை)

வேலணைப் பிரதேசத்திலுள்ள 780 ஆம் இலக்க வீதி படுமோசமாக சேதமடைந்துள்ள்தாகவும் இதனால் இவ் வீதியூடாக போக்குவரத்தைச் செய்யமுடியாத நிலை காணப்படுவதாகவும் அப்பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். குண்டும் குழியுமாக காணப்படும் இவ் வீதிப்பகுதியில் மக்கள் அதிகம் வாழ்வதாகவும் பல எண்ணிக்கையிலான மக்கள் இவ்வீதியால் தினமும் சிரமத்துடன் போக்குவரத்தை மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீதியில் ஆலயம், சனசமூக நிலையம் என்பன இருப்பதாகவும், இப்பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள் இவ்வீதியூடாக பயணம் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## மேட்டு நில பயிர்ச்செய்கையாளர்களுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கல்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

மேட்டுநில செய்கைகளில் ஈடுபட்டுவரும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 750 நீர்இறைக்கும் இயந்திரங்கள் மாவட்ட விவசாய திணைக்களத்திற்கு கிடைத்துள்ளதாகவும் தொடர்ந்தும் தமக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் கிடைக்கும் என்றும் அவற்றை மாவட்டத்தில் மேட்டுநில செய்கைகளை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும் என்றும் விவசாயதிணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் தமது பிரதேசத்தில் நீர்ப்பாசன குளங்கள் இருந்தும் நீரினை திறந்து விடக்கூடிய நீர்ப்பாசன முறைகள் இல்லை என்றும் சேற்று நீர்ப்பாசனத்தின் மூலம் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் கூடுதலான நீர் இறைக்கும் இயந்திரங்கள் தமது பிரதேசத்திற்கு தேவை என்றும் அவற்றை பெற்றுத்தருமாறு அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விடயத்தினை கவனத்தில் எடுப்பதாக விவசாயத்திணைக் களத்தினர் தெரிவித்துள்ளார். (110)

## உரமானியம் இல்லை என்ற வதந்தியால் விவசாயிகள் பரபரப்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு இம்முறை மானிய அடிப் படையில் உரம் விநியோகிக்கப்படமாட்டாது என்ற வதந்திகள் விவசாயிகள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ் ஆண்டு சிறுபோக செய்கைக்கு மானிய விலையில் 350 ரூபாவிற்கு உரங்கள் வழங்கப்படமாட்டாது என்று சில கமக்கார அமைப்புக்கள் மக்களிடையே வதந்திகளை பரப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊரியான் கிராமத்தில் செயற்பட்டு வரும் கமக்கார அமைப்பு ஒன்று கடந்த காலங்களில் செய்கைக்கான உரமானி யங்களில் மோசடிகளை செய்துள்ளதாகவும் இது குறித்த குற்றச்சாட்டுக்கள் முன்னர் பத்திரிகைகள் வாயிலாக வெளியிடப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே மேற்படி சில கமக்கார அமைப்புக்கள் இவ்வாறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கிளிநொச்சி கமநல சேவை திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, கடந்த காலங் களில் இடம்பெற்ற உரமானிய மோசடிகளை தடுக்கும் வகையில் ஒவ்வொரு கமக்கார அமைப்பின் கீழ் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளின் பெயர்பட்டியல்கள் கமநலசேவை திணைக்களத்தில் விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

தற்போது சிறுபோக செய்கையை மேற்கொண்டுள்ள சகல விவசாயிகளுக்கும் மானிய விலையில் உரம் வழங்கப் படும் எனவும் மேற்படி திணைக்களம் தெரிவித்துள்ளது. (110)

# பூநகரிப்பிரதேச வீதிகள் விரைவில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பேன்

## அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா



(பூநகரி)

கடந்த 30 வருடகாலமாக நாம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து எப்படி வாழ்ந்தோமோ அந்த துயரமான சம்பவங்களை நாங்கள் மறந்து புதிய வாழ்வை ஆரம்பித்துள்ளோம். நாம். அனைவரும் இப்போது மிகவும் சந்தோஷமாக வாழ்கிறோம். உங்களது பகுதிகளில் பல அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் பல நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளதால் நான் அண்மையில் நடந்த அமைச்சரவைக்கூட்டத்தில் இவ் வீதிகளை அபிவிருத்தி செய்ய பரிந்துரை செய்திருக்கிறேன். என சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

பூநகரி பிரதேசத்தை சேர்ந்த 17 பாடசாலைகளுக்கு சமூக சேவை அமைச்சினால் குடிநீர் தாங்கிகள் வழங்குகின்ற நிகழ்வு நேற்று முன்தினம் 10.00 மணியளவில் பூநகரி மகா வித்தியாலய வளாகத்தில் 661ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் சன்னா கொடித்துவக்கு தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது. உங்கள் பிரதேச அபிவிருத்தியில் நாம் மிகவும் அக்கறையாக இருக்கிறோம். உங்கள் பிரதேசம் அபிவிருத்தி அடைய எங்கள் நாடு அபிவிருத்தி அடையும் அப்பொழுது நாம் அனைவரும் சந் தோசமாக வாழுவோம். அந்த நாள் வெகு விரைவில் வந்தேதீரும்.

அண்மையில் நடைபெற்ற வெசாக் தினக்கொண் டாட்டத்தில் மக்கள் வெசாக்தினக்கொண் டாட்டங்களில் கலந்து கொண்டமையை நானும் இப்பகுதியில் தங்கியிருந்து அவதானித்து மிகவும் மகிழ்ச்சி அடைந் தேன் தமிழ் மக்கள் அன்போடு எம்மையெல்லாம் உபசரித்தார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சரும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களும் 17 பாடசாலை அதிபர்களுக்கு நீர்த்தாங்கிகளை கையளித்தனர்.

இந்நிகழ்வில் பூநகரி கமக்கார அமைப்பினர், மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பொது அமைப்புக்கள் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் என பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

இறுதியாக பூநகரி மகாவித்தியாலய அதிபர் இ. பாலசந்திரன் பாடசாலை சார்பாக நன்றியுரை வழங்கினார். (112)

## ஆய்வுக்கட்டுரைகள் அனுப்பிவைக்கவும்

(யாழ். நிருபர்)

சைவசித்தாந்த ஆய்வு நிறுவனத்தின ரால் சைவ சித்தாந்த கற்கையில் ஆர்வ முடையோரின் நன்மைகருதி சிவப்பிரகா சம் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மூன்றுமாதகால கற்கை நெறியாக நடைபெறவுள்ள இக்கற்கை நெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் எதிர் வரும் 28ஆம் திகதிக்கு முன்பதாக சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனம் ஏழாலை மேற்கு, சுண்ணாகம் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு சைவசித்தாந்த ஆய்வு நிறுவன இயக்குநர் சைவப்புலவர் கு.ரஜீவன் அறிவித்துள்ளதுடன்

சைவசித்தாந்தம் இதழ் நான்கிற்கு சைவ சித்தாந்த அறிஞர்களிடமிருந்து பொருத்தமான ஆய்வுக் கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுவதாகவும் கட்டுரை 10 பக்கங்களுக்கு மேற்படாதவாறு இருக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (10)

## வங்கி திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன் முதலாக தனியார் வங்கியான செலான் வங்கியொன்று நாளை புதன்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது. இப்பிரதேசத்திலுள்ள மக்கள் இவ்வங்கியினூடாக தமது வங்கிச்சேவைகளை பெற்றுக் கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

## முப்பது ரூபாவுக்கு விற்பனையாகும் நுங்கு

(நல்லூர்)

யாழ். குடா நாட்டில் தற்போது நுங்கு சீசன் ஆரம்பித்துள்ளது. பனம் பொருளாகக் கிடைக்கும் நுங்கை கடந்த வருடம் தென்னிலங்கையுட்பட யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சுற்றுலாப்பயணிகள் பலரும் ஆர்வத்துடன் பருகியதோடு தமது உறவினர்களுக்கும் வழங்குவதற்காக வாங்கிச்சென்றனர்.

இந்த வருடம் தற்போது நுங்கு சீசன் ஆரம்பித்துள்ளதால், நுங்குகள் பல யாழ். நகரவீதிகளுக்கு வந்து விட்டன. ஒரு நுங்கு 30 ரூபாப்படி தற்போது விற்பனையாகின்றது. சுற்றுலாப்பயணிகள் இவற்றை பெருமளவு கொள்வனவு செய்து வருவதால், நகரில் நுங்கு வியாபாரிகளும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (26)

## வைத்திய சான்றிதழ் பெறுவதற்கு அலையும் அரச ஊழியர்கள்

(கற்சிலைமடு)

வன்னிப்பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தகாலத்தில் அரச ஊழியர்களின் சுயவிபரக்கோவைகள் தொலைந்தும், சேதமடைந்தும் போய் உள்ளமையால் அவற்றை மீண்டும் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளில் அரச திணைக்களங்கள் ஈடுபட ஆரம்பித்துள்ளன.

இன் நடவடிக்கையின் ஓர் அங்கமாக மீண்டும் வைத்திய சான்றினை பெற்று சமர்ப்பிக்குமாறு அரச ஊழியர்களை திணைக்கள தலைவர்கள் கோரியுள்ளனர்.எனவே இவற்றினை பெறுவதற்காக ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பொது வைத்திய சாலைக்கு கூட்டம் கூட்டமாக தினமும் வந்து செல்வதினை அவதானிக்க முடிகின்றது. (42)

## மாணவர்கள் மத்தியில் சமயப்பற்று அருகிவருவது கவலையளிக்கின்றது

### கலாசார அலுவலர் சோமசுந்தரசர்மா

(யாழ் நிருபர்)

திருமுறைகளைப் பாராயணஞ் செய்வதன் மூலம் இறை உணர்வும் ஆண்ம திருப்தியும் ஏற்படும். இன்றைய மாணவர்களைப் பஜனை நிகழ்வுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களிடையே இறைநம்பிக்கையையும் பக்தி உணர்வினையும் ஏற்படுத்தமுடியும் என காரைநகர் பிரதேச கலாசார அலுவலர் நா. சோமஸ்கந்தசர்மா தெரிவித்தார்.

இவ்வாறு காரைநகர் பண்டத்தரிப்பான்புலம் சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற பஜனை நிகழ்வினை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய காரைநகர் பிரதேச கலாசார அலுவலர் நா. சோமஸ்கந்தசர்மா குறிப்பிட்டார்.

மெய்கண்டான் வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர் தொடர்ந்து பேசுகையில் தற்போது மாணவர்கள் மத்தியில் இறை நம்பிக்கையும் சமயப்பற்றும் குன்றி வருகிறது. ஆலயவழிபாடுகளில் கூட இன்றையமாணவர் சமூகம் அக்கறை காட்டுவதில்லை

மாணவர்களை இத்தகைய பஜனை நிகழ்வுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்கள் ஆலயம் செல்வதற்கும் திருமுறைகளைப் பாராயணஞ்செய்வதற்கும், சமய விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழ்வதற்கும் வழிகாட்டுவதாக அமையும்.

மாணவர்கள் மனதை ஒரு நிலைப்படுத்தி பக்தி பூர்வமாக பஜனைப் பாடல்களைச் சேர்ந்து பாடுவதன் மூலம் மனதிலே பக்தி பரவசமும் இறை உணர்வும் சமய நம்பிக்கையும் ஏற்பட்டு தாம் கற்கின்ற பாடங்களில் கூட மனதை ஒரு நிலைப்படுத்தி கற்றுத்தேர்ச்சியடையமுடியும் எனவும் குறிப்பிட்டார். (10).

## வர்த்தகருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த நபர் இனங்காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

தொலைபேசி மூலம் தொலை தொடர்பு நிலைய உரிமையாளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த நபர் இனங்காணப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒரு மாத காலமாக ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்திற்கு அண்மையாக இயங்கும் தொலை தொடர்பு நிலையத்திற்கு தொடர்பு கொள்ளும் ஒருவர் அங்கு பணியாற்றும் பெண்ணை கடமையிலிருந்து நீக்குமாறும் நீக்காவிட்டால் உரிமையாளரை கொலை செய்யப்போவதாக அச்சுறுத்தி வந்துள்ளார்.

உரிமையாளர் மீதான அச்சுறுத்தல் அதிகரிக்கவே கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவையில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகையில் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் தொலைதொடர்பு நிலையத்திற்கு சென்று ஒருவர் அங்கிருந்த பெண்ணை அச்சுறுத்தி கடையின் ஆவணங்களையும் எடுத்து சென்றுள்ளார்.

உரிமையாளர் இது குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யவே பொலிஸ் பொறுப்பதிகாரி பல்கம் பிளேட் தலைமையிலான பொலிசார் குறித்த பகுதிக்கு சென்று விசரணை நடத்தினர் அதன் போது மூத்த நயினார் ஆலயத்தில் மாபிள் பதிக்கும் தொழிலில் ஈடுபட்டுவந்த சுழிபுரத்தை சேர்ந்த தயாபரன் என்பவரே அச்சுறுத்தியவர் என கண்டு பிடித்தனர். ஆயினும் பொலிஸாரின் வருகையை எதிர்பார்த்த குறித்த இளைஞன் அரைமணிநேரம் முன்பாகவே ஆலய பகுதியிலிருந்து வெளியேறிவிட்டார். இதனைஅடுத்து ஆலய நிர்வாக உறுப்பினர் ஒருவரை விசாரணை செய்த பொலிஸார் குறித்த நபரின் தொலைபேசி இலக்கம் மட்டுமே தெரியும் எனக்கூறின

போதிய விபரங்கள் இன்றி தொழிலுக்கு அமர்த்தியதற்கு அவரை எச்சரித்தபொலிசார் குறித்த நபரை பொலிஸில் ஒப்படைக்குமாறு பணித்தனர்.

## யாழ். மாவட்டத்தில் 47ஆயிரத்து 300பேர் இன்னமும் மீள் குடியேற்றப்படவில்லை

### யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 47 ஆயிரத்து 300 பேர் இதுவரை தமது சொந்த இடத்தில் மீளக்குடியேற்றப்படவில்லை என்றும் அவர்கள் உறவினர், நண் பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர் என்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

போரினால் இடம்பெயர்ந்த மக்களைக் குறிப் பிட்ட அளவில் மீளக்குடியமர்த்தி உள்ளோம். இருப்பினும் இன்னும் உறவினர், நண்பர்களின் வீடுகளில் மக்கள் தங்கியுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

பிரதேச செயலக பிரிவு வாரியாக மீள்குடி யேற்றம் செய்யப்படாமல் இருக்கும் மக்களின் விபரங்களை அவர் வெளியிட்டுள்ளார்.

வேலணைப்பிரதேச செயலகப்பிரிவு 93குடும்பங்கள், 376 பேர். ஊர்காவற்துறை பிரதேச செயலகப்பிரிவு- 11குடும்பங்கள், 41பேர். காரைநகர் பிரதேச செயலகப்பிரிவு - 114 குடும்பங்கள், 350 பேர். யாழ்ப்பாண பிரதேச செயலகப்பிரிவு 641 குடும்பங்கள், 2531 பேர். நல்லூர் பிரதேச செயலகப்பிரிவு 648 குடும்பங்கள், 2584 பேர். சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு -228 குடும்பங்கள், 737 பேர். சங்கானை பிரதேச செயலகப்பிரிவு -660 குடும்பங்கள், 2551பேர். உடுவில் பிரதேச செயலகப்பிரிவு -143 குடும்பங்கள், 559 பேர், தெல்லிப்பளை பிரதேச செயலகப்பிரிவு - 6443 குடும்பங்கள், 29,237 பேர். கோப்பாய் பிரதேச செயலகப்பிரிவு 211 குடும்பங்கள், 559 பேர். சாவகச்சேரி பிரதேச செயலகப்பிரிவு 616 குடும்பங்கள், 2167 பேர்.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகப்பிரிவு 1300 குடும்பங்கள், 5608 பேர். மொத்தம் 11 ஆயிரத்து 108 குடும்பங்களைச் சேர்ந்த 47 ஆயிரத்து 300 பேர் இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படாது நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் முகாம்களிலும் தங்கியுள்ளனர் என யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.



# திருடிய தாலிக் கொடியைத் தவறவிட்டு 30 பவுண் நகைகளுடன் தப்பியோட்டம்

## கரணவாய் பகுதியில் சம்பவம்

(கரணவாய்)

நொத்தாரிஸ் தோட்டம் கரணவாய் மேற்குப் பகுதியிலுள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் 30 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

வீட்டிலுள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் வீட்டின் பின்புறமாக யன்னலை உடைத்துக் கொண்டு உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து 30 பவுண் தங்க நகைகள், வீடியோக் கமெரா, கைத்தொலைபேசி என்பவற்றைத் திருடிக் கொண்டு சென்ற சமயம் தாலிக்கொடி கீழே விழுந்துள்ளதால் அவற்றை விட்டு விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

குறித்த பகுதியில் வசிக்கும் பொன்னையா ரவிச்சந்திரன் என்பவது வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளர் நேற்றுக் காலை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், இதனையடுத்து நெல்லியடிப் பொலிஸாரும் கைரேகை நிபுணர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சோளங்கன் பகுதியிலுள்ள சுப்பிரமணியம் சண்முகநாதன் என பவரது வீட்டிலும் திருடர்கள் புகுந்து அலுமாரியை உடைத்து கமெரா, கைத்தொலைபேசி, நீர்இறைக்கும் இயந்திரம் என்பவற்றைத் திருடி அயலிலுள்ள தோடடக்காணியில் அவற்றைப் போட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

## சட்டவிரோதமாக மணலை ஏற்றியவருக்கு அபராதம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சியில் பல்வேறு பகுதிகளில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றிய மூவருக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தினால் 15 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இதில் பளை, கிளிநொச்சி, பொன்னநகர் மற்றும் அக்கராயன் பகுதிகளில் இந்தச் சட்டவிரோதமான செயற்பாட்டில் ஈடுபட்ட மூவரைப் பொலிஸார் கைது செய்து நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிமன்ற நீதிபதி சிவகுமார் குற்றவாளிகளுக்குத் தலா 5ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்ததுடன், செலுத்தத் தவறின் 2 மாத கால சிறைத்தண்டனையை அனுபவிக்க வேணடும் எனத் தீர்ப்பளித்தார். அத்துடன் ஏறறி வந்த மணலைப் பறிமுதல் செய்யுமாறும் மன்றுக்கு உத்தரவிட்டார். (110)

# உவர் நீர்த் தடுப்பணைகள் சேதம்

## காலபோக நெற்செய்கையாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் காலபோகத்தின் போது மண்டைதீவுக் கிராமத்தில் 200 ஏக்கர் வயல் நிலத்தில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள நெற்செய்கையாளர்கள் தயாராகி உள்ளபோதும், அக்கிராமத்தைச் சூழவுள்ள உவர்நீர் தடுப்பணைகள் சேதமடைந்து திருத்தப்படாததின் காரணமாக அப்பாறையின் அதேயளவு நெற்செய்கையை மேற்கொள்ள முடியாதுள்ளதாக வேலணைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக குழுக்கூட்டத்தில் விவசாயிகள் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2010 கால போகத்தின்போது மண்டைதீவுப் பகுதியில் சுமார் 40 ஏக்கர் வரையான வயல் நிலத்தில் நெற்பயிர்ச் செய்கை பண்ணப்பட்டது. அதன் மூலம் சிறந்த அறுவடையினையும் விவசாயிகள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இவ்வருடம் காலபோகத்தின்போது 200 ஏக்கர் வரையில் வயல் நிலத்தில் விவசாயிகளால் நெற்பயிர்ச் செய்கை பண்ண உத்தேசிக்கப்பட்டுள்ளது. இருந்தும் மண்டைதீவுக் கிராமத்தினைச் சூழவுள்ள உவர் நீர் தடுப்பணை சேதமடைந்திருப்பதன் காரணமாக அவ்வாறான அளவு நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும், விவசாயிகள் சார்பில் அப்பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த உவர் நீர்த் தடுப்பணையை எதிர்வரும் கால போகத்திற்கு முன்னர் செப்பனிட்டு விவசாய நடவடிக்கைக்கு ஆவண செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்வரும் ஒரு மாத காலத்தற்குள் இதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் இவ் உவர் நீர்த்தடுப்பணை திருத்தத்திற்கான நிதி ஒதுக்கீடும் மேற்கொள்ள்ப்பட்டு கேள்விப் பத்திரமும் கோரப்பட்டுள்ளதாகவும் அப்பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

## நோயாளர்கள் சிரமம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனைத்து மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மருந்துத் தட்டுப்பாட்டினால் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வரும் வெளி நோயாளர்களும் மற்றும் விடுதியில் தங்கியிருக்கும் நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தாம் சில மருந்துகளை வெளியில் அதிக விலை கொடுத்துப் பெற்றுக்கொள்வதாகவும் நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு முன்னர் மருந்து வகைகளை உரிய இடத்திலிருந்து பெற்றுக் கொள்ள வைத்தியசாலை நிர்வாகம் தவறியதாலேயே நோயாளர்கள் பெரும பாதிப்புக்குள்ளாவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதைவிட இவ்வைத்திய சாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் தாதிமார், நோயாளர்களை பராமரிப்பவர்கள் தங்களது மனம் புண்படும் படியாக ஏசுவதாகவும் இந்த நோயாளர்கள் தமது மன வருதத்தைத் தெரிவிக்கின்றனர்.

எனவே நோயாளர்களின் மருந்துத் தேவையைக் கருத்திற்கொண்டு குறித்த வைத்தியசாலை நிர்வாகம் மருந்துத் தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என நோயாளர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (19)

நானொரு மடையன். இந்த நாளேப் பொடியங்கட குணம் தெரியாமல் கொளுவிப் போடுவன் பாருங்கோ!

எனக்கு உவையல் சந்தி வழியே நிண்டு கொண்டு கூத்தடிக்கிற தொண்டும் படிக்கிறேல்ல, அதனாலதான் வலியக் கொளுவுறனான்.


பின்னை என்ன உவையளுக்கு வீடு வாசல் இல்லையோ?

பொழுது கிளம்புறதுதான் வீதியளுக்கு வருகின்மெண்டில்லை. பொழுது பட்டாத்தான் அவைக்கு நல்ல வேட்டை!

போறவாற பெட்டையளுக்கு குரங்குச் சேடடை விடுகிறதும், இல்லாமல், வயதுபோன பெரிய மனிசனக் கண்டாலும் அவைக்கு ஒரு 'கிக்' வந்திடும்.

'காவோலை விளக் குருத்தோலை சிரிக்கிறதெண்டு' அந்த நாளேல சொல்லுவினம். இண்டைக்கு நாங்களெண்டால் நாளைக்கு அவையளெண்டு நினைக்கிறேல்ல.

அவை நாலைந்து பேர் நிண்டால் வேறையாரும் றோட்டால போகேலாது.



சைக்கிள றோட்டுக்கு நட்ட நடுவே வைத்துக் கொண்டு அவையும் ஏறிக் கவட்டை சீற்றில வைத்துக் கொண்டு நிக்கிற அழகைக் காணேக்கதான் எனக்கு ஏறிக் கொண்டு வாற! வேறையென்ன றோட்டு என்னத்துக்கு இருக்கு. இவையள் நிண்டு கூத்தடிக்கவே. ஆத்திரம் அவசரமாக எங்கையும் போறேண்டா முடியுதே!

உவையளோட ராத்தல் பண்ணிக் கொண்டுதான் போய் வரவேண்டும். பாதை போக்கு வரவுக்காகவே உருவாக்கப்பட்டதென்பதை இதுகள் எப்பதான் தெரிந்து கொள்ளல் போகுதுகளோ தெரியேல்ல. நானொருமடையன். மடை வேலை பார்த்துப் போடுவன் அதுதான் யோசனையாகக் கிடக்கு?

# கிராமிய மட்ட கடற்றொழில் அமைப்புக்கள் உருவாக்கம்

(யாழ்.நிருபர்)

யாழ்.குடாநாட்டில் மீனவத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் வசதியாக கிராமங்கள் தோறும் கிராமிய கடற்றொழில் அமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைப்படி உருவாக்கப்படும் இவ்வமைப்புக்கள் மாவட்டமட்டத்தில், கிராமிய கடற்றொழில் சம்மேளனம் எனவும், தேசிய ரீதியாக தேசிய கடற்றொழில் மகா சம்மேளனம் எனவும் செயற்படவுள்ளன. கடந்த வாரம் காரைநகர் வெடியரசன் வீதியில் அமைநதுள்ள அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மணடபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அம்பாள் கிராமிய கடறறொழிலாளர் கடற்றொழில் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் பரிசோதகர் என்.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி அமைப்புக்கான புதிய நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. தலைவர் க.இராசேந்திரன் துணைத் தலைவர் கு.கமலவாசன், செயலாளர் கி.கிரிபாலன், பொருளாளர் தி.பிரபாகரன், நிர்வாகசபை உறுப்பினர்களாக அ.இரஞ் சிதமலர், க.நாகேஸ்வரி, மா.தேவராசா, சி.ஜீவாகரன், த.பிரகாஷ், சி.சூரியகுமார், வை.கிருஷ்ண பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (10)

# நோய்வாய்ப்பட்டிருந்த பெண்மணி மண்ணெண்ணை ஊற்றி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் நேற்று நள்ளிரவு வேளையில் தனக்குத்தானே மண்ணெண்ணை ஊற்றித் தீ மூட்டித் தற்கொலை செய்த சம்பவமொன்று வத்திரிரையான் வடக்குத் தாளையடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த நித்தியானந்தன் விமலாதேவி (வயது-58) என்ற பெண்ணே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இப்பெண் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. தீயில் எரிந்த இவரை மருதங்கேணி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மந்திகை வைத்திய சாலைக்குக் கெண்டுவரப்பட்டார்.

மேலதிக சிகிச்சையின் நிமித்தம் யாழ் போதனா வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்ட அவர் நேற்று முற்பகல் சிகிச்சை பயனின்றி அங்கு மரணமானார். (பா)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(24.05.2011 – செவ்வாய்க்கிழமை)

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம்

வைகாசி 10 ஆம் நாள்.

நட்சத்திரம் : அவிட்டம் மு.இரவு 10.11 வரை,

திதி : ஸப்தமி பி.ப. 2.43 வரை,

ராகுகாலம் : 2.52 – 4.22,

சுப நேரம் : 10.22 – 11 – 52

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணவரவு, நண்பர் வருகை, குடும்பத்தில் நிம்மதியின்மை, வீண்பழி கேட்டல்.

ரிஷபம்:– திருடர்கள் பயம், பணக் கஷ்டம், வீண் செலவு, மன உளைச்சல்.

மிதுனம் :– விபத்துவர இடமுண்டு, பணம் வரும், நண்பர் தொல்லை, மனக் கவலை.

கடகம்:– வீட்டில் குழப்பம், பணம் குறையும், மனக்கவலை, உடல் நலம் பேணுக.

சிம்மம்:– களவு போகும் கவனம், பண வரவு, குடும்பத்தில் கவலை, மன உளைச்சல்.

கன்னி :– பணக் கஷ்டம், நண்பர் வருகை, மதிப்பு உயரும், உடல் ஆரோக்கியம் இருக்கும்.

துலாம் :– மனத்தில் நிம்மதி இருக்காது, வீண் அலைச்சல், திருடர் பயம், கவலை.

விருச்சிகம்:– பணம் வரும், உடல் ஆரோக்கியமாக இருக்கும், மனநிம்மதி, விபத்து வரக் கூடும்.

தனுசு:– மன உளைச்சல், பணக் கஷ்டம், திருடர் பயம், கடவுள் நம்பிக்கை.

மகரம்:– வீண் பயம், மன நிம்மதி இல்லை, பணம் வரும், நண்பர் வருகை

கும்பம் :– மதிப்பு உயரும், பணம் வரவு, களவு போகலாம், கவனம் தேவை, மனக்கவலை.

மீனம்:–கௌரவம், மனநிம்மதி, பணம் வரும், வீணான கவலை.

## இருவருக்கு வாய்ப்பு

(லண்டன்)

இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் இயான் மோர்கன், ரவிபோபரா ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், ஒரு 20 ஓவர் போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டி தொடரில் விளையாடுகிறது. இங்கிலாந்து-இலங்கை அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கார்டிப்பில் வருகிற 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளுது.

இந்த போட்டிக்கான இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர் இயான் மோர்கன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ரவி போபரா மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ளார். அஜ்மல் ஷாசாத்துக்கு பதிலாக ஸ்டீவன் பின் இடம் பெற்றுள்ளார்.

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி வருமாறு:-

ஸ்ரோஸ் (தலைவர்), அலைஸ்டர் குக், ஜோனதன் டிராட், பீட்டர்சன், இயான் பெல், இயான் மோர்கன், மாட் பிரியர், ஸ்டுவர்ட் பிராட், ஸ்வான், கிறிஸ்ட் டிரெம்லட், ஆண்டர்சன், ஸ்டீவன் பின்.

## இன்று ஆரம்பம்

ஐ.பி.எல். தொடரின் அடுத்த சுற்றான பிளே ஆப் முறையிலான ஆட்டங்கள் இன்று முதல் நடைபெறவுள்ளது. இதன் முதல் அரை இறுதியில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியும், சென்னை சூப்பர்கிங்ஸ் அணியும் இன்று மோதுகின்றன.

இந்தப் போட்டி இன்று இரவு 8 மணிக்கு மும்பையில் நடக்கிறது. 2ஆவது அரை இறுதிப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்தப் போட்டி நாளை 25ஆம் திகதி இரவு 8 மணிக்கு மும்பையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி விக்கெட் காப்பாளர் சாதனை

(ஹமில்டன்)

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் விக்கெட் கீப்பர் அடம் பராரே எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் பராரேவின் முதல் முயற்சி தோல்வியில் முடிந்தபோதும், இப்போது தனது இரண்டாவது முயற்சியில் எவரெஸ்டில் காலடி பதித்துவிட்டார். உயரே செல்லும் வழியில் ஆக்சிஜன் இல்லாததால் பல முறை தடுமாற்றம் ஏற்பட்டபோதும் அவர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியது: 20 முதல் 30 நிமிடங்கள் எவரெஸ்ட் சிகரத்தில் இருந்தேன். அங்கு சில புகைப்படங்களையும் எடுத்துள்ளேன். மீண்டும் அங்கு செல்ல வேண்டும். கடல் மட்டத்தில் இருந்து 8848 மீட்டர் உயரத்தில் உள்ள சிகரத்தை அடைய வேண்டும் என்பது நீண்ட நாள் கனவு. வீர சாகசக் கலைகள் இப்போது அழிவின் விளிம்பில் இருப்பதாக நினைக்கிறேன். மேலே செல்ல செல்ல ஆக்சிஜன் இல்லாததால் சுவாசப் பிரச்சினை ஏற்பட்டது. இதனால் உடலளவில் கடுமையாகப் பாதிக்கப்பட்டேன்.

இந்த சாதனையை எட்டுவதற்காக மிகவும் கடுமையாக உழைத்தேன். சில நேரங்களில் சின்ன விடயங் கள்கூட பெரிய பிரச்சினையாகிவிடும். உடலளவிலான பாதிப்பை தவிர வேறு எந்த பிரச்சினையும இல்லை என்றார்.



## கோல் அடிப்பதில் ரொனால்டோ சாதனை

ரியல் மட்ரிட் அணியின் அதிரடி வீரர் ரொனால்டோ லீக் கால்பந்து போட்டியில் கோல் அடிப்பதில் புதிய சாதனை படைத்துள்ளார்.

அவர் கடந்த சனிக்கிழமை அல்மேரியா அணியுடன் மோதிய ஆட்டத்தில் தமது அணி 8-1 கோல் கணக்கில் வெற்றி பெற உதவினார். இந்த ஆட்டத்தில் 26 வயது ரொனால்டோ 2 கோல்களை அடித்தார். இதன் மூலம் இந்த தொடரில் 40 லீக் கோல்களை அடித்த சாதனை வீரர் ஆனார்.

ஒரு தொடரில் அதிக கோல் அடித்த வீரர் லா லிகா சாதனையையும் முறியடித்தார். கடந்த 4 ஆட்டத்தில் ரொனால்டோ 11 கோல் அடித்தார். பிரிமியர் லீக் உள்ள அனைத்து போட்டிகளும் இந்த தொடர்களில் ரொனால்டோ 53 கோல் அடித்தார்.

தனது கோல் குவிப்பில் அவர் 7 ஹட்ரிக் கோல் சாதனை படைத்துள்ளார். ஹட்ரிக் என்பது ஒரு ஆட்டத்தில் தொடர்ந்து 3 கோல்களை போடும் அற்புத சாதனையாகும்.

தனது கோல் குவிப்பு சாதனை குறித்து ரொனால்டோ கூறுகையில், எனது மட்ரிட் அணியினருக்கே கடமைப்பட்டு இருக்கிறேன். அவர்களது ஒத்துழைப்பால் தான் என்னால் இவ்வளவு கோல்களை குவிக்க முடிந்தது என தெரிவித்தார். அவர்கள் உதவி இல்லாமல் இந்த லீக் தொடரில் 40 கோல் அடித்திருக்க முடியாது என்றும் அவர் நெகிழ்வுடன் தெரிவித்தார்.

## புதிய உலக சாதனை

(பெர்லின்)

ஜெர்மனி வீராங்கனை பெட்டி ஹெய்டர் பெண்களுக்கான ஹம்மர் துரோ போட்டியில் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

பெர்லினில் நடைபெற்றுவரும் ஹேரல் தடகள போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஹம்மர் துரோ போட்டியில் 27 வயதான ஹெய்டர் 79.42 மீட்டர் தூரம் எறிந்து புதிய உலக சாதனை படைத்தார்.

முன்னதாக கடந்த 2010ஆம் ஆண்டு போலந்தின் உலக சம்பியன் அனிடா லெபர்டஸ்கி 78.30 மீட்டர் தூரம் வீசியதே உலக சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. சாதனையை ஏற்படுத்துவேன் என நான் நினைக்கவில்லை. இருப்பினும் அதையிட்டு மகிழ்ச்சி. தொடர்ந்து சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன் என ஹெய்டர் சாதனையின் பின்னர் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் முன்னிலை



(பாஸ்ரி)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள், பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும் இறுதியுமான போட்டி பாஸ்ரி மைதானத் தில் நடைபெற்று வருகின்றது.

இதில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி, அதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 223ஓட்டங்களைப் பெற்றது. இதில் சாமு வேல்ஸ் 57, ரோச் 29 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் ராம் போல் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்'களைப் பெற்றார். பந்துவீச்சில் சயிட் அஜ்மல், மொகமட் ஹபீஸ் ஆகியோர் தலா மூன்று, ரஹ்மான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

49 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய பாகிஸ்தான் அணி, மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, மூன்று விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் தபீக் உமர் 97 ஓட்டங்களையும், அணித் தலைவர் மிஸ்பா உல்-ஹக் 13 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழாதிருந்தனர். மற்றும் அசார் அலி 53 ஓட்டங்களைப் பெற்றார்.

ஏழு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் பாகிஸ்தான் அணி 251 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. இப்போட்டியை வெல்ல பாகிஸ்தான் முனைப்புடன் போராடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2ஆவது பயிற்சிப் போட்டியிலும் இலங்கை அணி த்ரில் வெற்றி

(டெர்பி)

இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கெதிரான நான்கு நாள் பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி 38 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கை அணி லயன்ஸ் அணியுடனான நான்கு நாள் பயிற்சிப் போட்டியில் மோதியது.

கடந்த 19ஆம் திகதி டெர்பி மைதனாத்தில் நடைபெற்ற இப்போட்டி நேற்று முன்தினம் நிறைவடைந்தது. ஆறு விக்கெட்டுக்களை இழந்து 392 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை அணி, அதன் இரண்டாவது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 448 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பரணவிதாரன, அணித் தலைவர் டில்சான் சதம் பெற்றனர். மற்றும் சமரவீர 74 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டேர்ன்பாக் நான்கு, பின் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 222 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய லயன்ஸ் அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்று, 38 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் கில்பேர்த் 38, பட்டேல் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சி.ஆர்.டி. பெர்னாண்டோ மூன்று, ஏ.என்.பி.ஆர். பெர் னாண்டோ நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். லயன்ஸ் அணி முதல் இனிங்சில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 493 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இலங்கை முதல் இனிஙசில் சகல விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது.

பலோ ஒன்னில் மீண்ட இலங்கை அணி சிறப்பான வெற்றியைப் பெற்றிருப்பதாகவும், இந்த வெற்றிகள் இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரில் பிரதிபலிக்கும் என்றும் கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

## இலங்கைக்கு பாகிஸ்தான் அழைப்பு

(லாகூர்)

பாகிஸ்தான் மண்ணில் கிரிக்கெட் தொடர் ஒன்றில் விளையாட இலங்கை அணிக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது.

பாகிஸ்தான் மண்ணில் இலங்கை அணியே கடைசியாக கிரிக்கெட் தொடரில் விளையாடியது. கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த இந்த தொடரின்போது இலங்கை அணி மீது லாகூரில் தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் மண்ணில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவில்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காக உலகக் கிண்ண போட்டியை நடத்தும் ஏனைய நாடுகளில் இருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்டதோடு பாகிஸ்தான் மண்ணில் நடைபெற வேண்டிய போட்டிகள் வேறு நாடுகளில் நடைபெற்றுவருகின்றன.

இந்நிலையில் ஐ.சி.சி. போட்டி அட்டவணைப்படி பாகிஸ்தான் இலங்கையுடனான டெஸ்ட், ஒருநாள் தொடர்களை வரும் ஒக்டோபர் மாதத்தில் நடத்தவேண்டும்.

பாகிஸ்தான் மண்ணில் நடைபெற வேண்டிய இந்த தொடர் பாதுகாப்பு காரணங்களுக்காக இலங்கைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த தொடரிலிருந்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் இஜாஸ் பட், மற்றும் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மலிக் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்த பேச்சுவார்த்தையின்போது மேற்படி தொடரை பாகிஸ்தான் மண்ணில் நடத்துவது குறித்து இலங்கை கிரிக்கெட் சபையிடம் கேட்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இலங்கையுடனான தொடரை பாகிஸ்தான் மண்ணில் நடத்துவதற்கு பாகிஸ்தான் அரசுக்குத் தேவைப்படுகிறது. இது குறித்து இலங்கை சபையிடம் நாம் பேச்சுவார்த்தை நடத்துவோம் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் இஜாஸ்பட் தெரிவித்தார்.

இதனிடையே இந்த விவகாரம் குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இலங்கைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

# பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி சங்கானை பிரதேச செயலகம் சம்பியன்






(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கிடையே நடைபெற்ற பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்ட சம்பியனாக சங்கானைப் பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன், யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியை நடத்தியது.

ம்ல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் சங்கானைப் பிரதேச செயலக அணியும் நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானைப் பிரதேச செயலக அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் 04 விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது. 51 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதி லுக்கு துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட் டுக்களை இழந்து 37 ஓட்டங்களை மட்டும் பெற்றது. போட்டியின் சிறந்த வீரங்கனையாக சங்கானைப் பிரதேச செயலக அணியைச் சோந்த கே.ரஜிதா தெரிவு செய்யப்பட்டார்.

## இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலய மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற யாழ்ப்பாண வலயம், வலிகாம வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம், வடமராட்சி வலயம் ஆகிய ஐந்து வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

குறித்த வலயங்களில் வெற்றிபெற்ற பாடசாலை அணி வீர, வீராங்களை போட்டியன்று காலை 8.30 மணிக்கு முன்னர் வருகை தந்து போட்டி சிறப்பாக நடைபெற ஒத்துழைப்புத் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (கா)

## இளைஞர் கழக மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியும் பெருவிளையாட்டுப் போட்டியும் பூநகரி மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் இதன் இறுதி நாள் நிகழ்வு நாளை மறுதினம் பிற்பகல் 2.00 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலர் தெரிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற கிரிக்கெட் இறுதிப் போட்டியில் நாச்சிக்குடா உதயசூரியன் அணியும், பூநகரி மகாவித்தியாலய இளைஞர் அணியும் மோதிக்கொண்டன. உதயசூரியன் அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. (112)

## பாடசாலை மட்ட சதுரங்கப் போட்டி திட்டமிட்டபடி நடைபெறுமென அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வியமைச்சின் அனுமதியுடன், இலங்கைப் பாடசாலைகள் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளிற்கிடையே நடத்த ஏற்பாடாகியுள்ள சதுரங்கப் போட்டி திட்டமிட்டவாறு நடைபெறுமென யாழ். மாவட்ட இணைப்பாளர் தயானந்தன் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் செயற்பட்டுவரும் இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கத்தினால் முதல் முதலாக யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களிடையே சதுரங்கப் போட்டியினை நடத்தவுள்ளது.

இதற்கமைவாக யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளான சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பருத்தித்துறை பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை ஹட்லிக் கல்லூரி, வடமராட்சி பெண்கள் பாடசாலை, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி முதலான பாடசாலைகளிற்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளிலுள்ள சதுரங்கக் குழுவிற்குப் பொறுப்பாகவுள்ள பொறுப்பாசிரியர்கள் யாழ். மாவட்ட இணைப்பாளருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 27, 28, 29ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள சதுரங்கப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)

## தீவக வலய மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

தீவக வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது. அதன் தொடர்ந்து வருமாறு:

**குண்டெறிதல்**

ஏ.ஜோயல் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), ஜே.துசிகரன் (புங்குடுதீவு ம.வி), விபுசனன் (தியாகராசா ம.ம.வி),

**தட்டெறிதல்**

ஏ.அல்பிரட் நிமைசன் (சென். அன்ரனீஸ் கல்லூரி), எஸ்.சாருகன் (வேலணை மத்திய கல்லூரி), கே.விஜயராஜ் (வேலணை மத்திய கல்லூரி),

**ஈட்டிஎறிதல்**

ஏ.சுஜீதரன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), கே.விஜயராஜ் (வேலணை மத்திய கல்லூரி), பி.கஜேந்திரன் (தியாகராஜா ம.ம.வி).

ஏ.சுஜீதரன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), எல்.பிரசாந் (காரைநகர் சுந்தர மூர்த்தி நாயன்னார் வித்தி), எஸ்.நிரோஜன் (வேலணை மேற்கு நடராஜா வித்தி).

**தட்டெறிதல்**

19 வயதுக்குட்பட்டவர்கள்

100 மீற்றர் ஓட்டம்

பி.பில்கிளின்ரன் (புங்குடுதீவு ம.ம.வி), வை.கோகுலன் (டாக்டர் ஏ. தியாகராச ம.ம.வித்), ஜே.டிலுக்சன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி).

200 மீற்றர் ஓட்டம்

பி.பில்கிளின்ரன் (புங்குடுதீவு ம.வி), வை.கோகுலன் (தியாகராசா ம.ம.வி), ஜே.டிலுக்சன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி).

**400 மீற்றர் ஓட்டம்**

பி.சிவதீபன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), எஸ்.கஜன் (காரைநகர் சுந்தர மூர்த்தி நாயானார் வித்தி), எல்.ஜோசப் தனுசன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி).

**800 மீற்றர் ஓட்டம்**

எஸ்.கஜன் (காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி), ஜே.றொகான் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), ரி.இந்துஜன் (வேலணை மேற்கு நடராஜா வித்தி).

**1500 மீற்றர் ஓட்டம்**

என்.சயந்தரூபன் (தியாகராசா ம.ம.வி), கே.உதயபிரகாஷ் (அனலைதீவு சதாசிவம் ம.வி), எல்.ஜோசப் தனுசன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி).

**5000 மீற்றர் ஓட்டம்**

கே.உதயபிரகாஷ் (அனலைதீவு சதாசிவம் ம.வி), என்.சயந்தரூபன் (தியாகராசா ம.ம.வி), கே.கிருஷ்ணா (சென்.அன்ரனீஸ் கல்லூரி).

4X100 மீற்றர் அஞ்சலோட்டம

சென்.அன்ரனீஸ் கல்லூரி, தியாகராசா ம.ம.வி.

4X400 மீற்றர் அஞ்சலோட்டம

சென்.அன்ரனீஸ் கல்லூரி, தியாகராசா ம.ம.வி, வியாவில் சதாசிவ வித்தி.

நீளம் பாய்தல

பி.சிவதீபன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), கே.நிதர்சன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), பி.பத்மமேனன் (தியாகரசா ம.ம.வி).

உயரம் பாய்தல்

எஸ்.டெனிதாஸ் (அனலைதீவு சதாசிவம் ம.வி), ஐ.ஜெசிந் (வேலணை மத்திய கல்லூரி), எஸ்.டேமியன் மிலன் (நெடுந்தீவு ம.வி).

குண்டெறிதல்

பி.சிவதீபன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), பி.துவாரகன் (நயினாதீவு சிறிகணேசா கனிஷ்ட ம.வி), பி.பத்மநேசன் (தியாகராசா ம.ம.வி),

தட்டெறிதல்

எஸ்.டெனிதாஸ் (அனலைதீவு சதாசிவம் ம.வி). கே.நிதர்சன் (சென். அன்ரனீஸ் கல்லூரி), எஸ்.பிரசாந் (புங்குடுதீவு ம.வி).

தட்டெறிதல்

எஸ்.லஸ்ரின் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), எஸ்.சசிகரன் (அனலைதீவு சதாசிவம் ம.வி), ரி.சத்தியராஜ் (யாழ்ற்றன் கல்லூரி).

ஈட்டியெறிதல்

எஸ்.லஸ்ரின் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), ஆர்.டென்சன் (புங்குடுதீவு ம.வி), ஏ.கிருபன் (நெடுந்தீவு சிவப்பிரசாக வித்தி).

21 வயதுக்குட்பட்டவர்கள்

100 மீற்றர் ஓட்டம்

ஜே.கரிபிரதாஸ் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), எம்.கர்தீபன் (நயினாதீவு ம.வி), பி.கொலின் டயஸ் (சென்.அன்ரனீஸ் கல்லூரி).

200 மீற்றர் ஓட்டம்

ஏ.அருள்ராஜ் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), ஏ.தர்சன் (நெடுந்தீவு ம.வி), பி.கொலின் டயஸ் (சென்.அன்ரனீஸ் கல்லூரி),

400 மீற்றர் ஓட்டம்

ஏ.டொமிங்கோ (சென்.அன்ரனீஸ் கல்லூரி), என்.ஜெனாட்ராஜன் (நெடுந்தீவு ம.வி), ஏ. அருள் கோபாலராஜ் (சென்.அன்ரனீஸ் கல்லூரி).

800 மீற்றர் ஓட்டம்.

(தொடரும்)

## வித்தியானந்தா சம்பியன்

(கற்சிலைமடு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட துணுக்காய் முல்லைத்தீவு கல்வி வலயங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 19 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையினை வீழ்த்திய சம்பியனாக வித்தியானந்தாக் கல்லூரி அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டி கடந்த வாரம் முல்லைத்தீவு தண்ணீரூற்று டயமன்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்யில் 2-0 என்ற கோல் கணக்கில் வித்தியானந்தா பெண்கள் அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் செம்மலை மகாவித்தியாலய அணி வெற்றி பெற்றது. (42)

## விதானகே அவுட்

(கொழும்பு)

பொதுநலவாய விளையாட்டு விழாவில் பளுதூக்குதல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இலங்கை வீரரான வீசிந்தன விதானகே தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து சோதனையில் சித்தியடைத் தவறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் நடைபெறும் ஆசிய பளுதூக்குதல் போட்டியின்போது சிந்தன விதானகேபிடம் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து சோதனை நடத்தப்பட்டது. இதில் அவர் வெற்றிபெறவில்லை.

சிந்தன விதானகேயிடம் வழக்கமான சிறுசீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக விளையாட்டுத்துறை மருத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொதுநலவாய போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்ற இலங்கை குத்துச் சண்டை வீரான மஞ்சு வன்னியராச்சி ஏற்கனவே ஊக்கமருந்து சேதனையில் தோல்வியுற்றதால் அவரின் தங்கப் பதக்கம் பறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நெடியவனிடம் மேற்கொண்ட விசாரணைகளில் பல தகவல்கள் வெளியாகியுள்ளதாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தற்போதைய தலைவர்களில் ஒருவராக கருதப்படும் நெடியவனிடம் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் குறித்து முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது..

நோர்வே தூதரக தரப்பை மேற்கோள்காட்டி, சிங்கள நாளிதழ் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்காக புலம்பெயர் நாடுகளில் நிதிசேகரிக்கும் வலையமைப்பை முன்னெடுத்து வந்த 41வயதான பேரின்பநாயகம் சிவபரன், நெதர்லாந்து சட்டத்துறையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருகிறார்.

நெதர்லாந்தில் வசிக்கும் தமிழ் மக்களிடம் இவரினால் நிதிசேகரிக்கப்பட்டதாக வெளியான தகவல்களின் அடிப்படையிலேயே, நோர்வே நீதிமன்றின் அனுமதியுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பாக புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் விடுதலைப் புலி ஆதரவாளர்கள் குறித்தும் நெடியவன் பல தகவல்களை வெளியிட்டுள்ளதாக தூதரக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு நிதி கிடைக்கின்றமை மற்றும் தமிழ் நாட்டில் அவர்களின் செயற்பாடுகள் குறித்து விசேட கவனம் செலுத்தியே அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என அந்த நாளிதழ் மேலும் தெரிவித்துள்ளது.

# புனர்வாழ்வு பெற்ற 900 பேர் 5ஆம் திகதி சமூகத்துடன் இணைப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு பெற்ற 900 பேர் எதிர் வரும் 5ஆம் திகதி சமூகத்தில் இணைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் சீர்திருத்த அமைச்சின் செயலாளர் ஏ. திசாநாயக்க தெரிவித்தார்.

சமூகத்தில் இணைத்துக் கொள்ளப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள 900 பேரின் பட்டியல் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். புனர்வாழ்வு செய்யப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு தொழில் பயிற்சி மற்றும் சுயதொழில் பயிற்சிகள் வழங் கப்பட்டுள்ளதாகவும் பிள்ளைகளுடன் உள்ள முன்னாள் புலி உறுப்பினர்கள் தொடர்பாக இம்முறை அக்கறை செலுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர்கள் 4095பேர் தற்போது புனர்வாழ்வு முகாம்களில் உள்ளதாகவும் அவர்கள் படிப்படியாக புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்படுவார்களென்றும் அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார்

# இந்தியாவின் அதிகாரத்தைக் கண்டித்து நாடு தழுவிய ரீதியில் போராட்டங்கள்

## ஜே.வி.பி, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை மீது அழுத்தம் கொடுக்கும் இந்தியாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டங்களை நடத்த ஜேவிபியும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமும் தீர்மானித்துள்ளன.**

அரசியலமைப்புத் திருத்தம், மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணை, இந்தியாவின் வர்த்தகத் திட்டங்கள் தொடர்பாக, அண்மையில் புதுடில்லி சென்றிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் இந்திய அரசாங்கம் கடும் அழுத்தங்களைக் கொடுத்திருந்தது.

இதுகுறித்து விசனமடைந்துள்ள ஜே.வி.பி.யும் தேசப்பற்று தேசிய இயக்கமும், இது இலங்கையின் இறைமையை மீறும் செயல் என்று கண்டித்துள்ளதுடன் நாடு தழுவிய போராட்டங்களை இந்தியாவுக்கு எதிராக மேற்கொள்ளப் போவதாகவும் கூறியுள்ளன.

தமது அமைப்பு நாடு தழுவிய ரீதியில் கருத்தரங்குகளை நடத்தவுள்ளதாகவும், இந்தியாவின் அதிகாரத்தைக் கண்டித்து நாடு முழுவதிலும் பேரணிகளை நடத்தப் போவதாகவும், அரச சார்பு அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேர தெரிவித்துள்ளார்.

மே 30ஆம் நாள் கொழும்பில் முதலாவது எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இந்தியாவுடன் இணைந்து கூட்டறிக்கை வெளியிட இணங்கியிருக்கக் கூடாது. நாம் எந்தவொரு வெளிநாடும் கூறுவதைக் கேட்க வேண்டியதில்லை. எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ளலாம்.

1ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்வதற்காக நாம் பரப்புரை செய்யவுள்ளோம்.

அதேவேளை இந்தியாவோ அதனை அடிப்படையாக வைத்து அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்துமாறு கூறியுள்ளது. என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்க,

மேற்கு நாடுகள் தீர்வு காணுமாறு கூறிய போது அந்தத் திட்டங்களை நிராகரித்த அரசாங்கம், இந்தியா அதைக் கூறியபோது எதிர்ப்புத் தெரிவிக்காமல் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தியா அரசியலமைப்பை மாற்றுமாறு கோர முடியாது. இது ஒரு உள்ளூர் விவகாரம். என்று கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் தீவிரமான விடயங்கள் குறித்து இந்தியாவுடன் மேற்கொண்டுள்ள இணக்கப்பாட்டுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்களை நடத்தப் போவதாக ஜே.வி.பியும் கூறியுள்ளது.

# தடுத்துவைக்கப்பட்ட மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

தமிழ் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டள்ள 31 மீனவர்களையும் விடுவிப்பது தொடர்பில் சென்னையிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயமும் வெளிவிவகார அமைச்சும் இணைந்து உடனடி நடவடிக்கை எடுத்துள்ளதாக மீனவ மற்றும் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

6 மீன்பிடி வள்ளங்களுடன் 31 மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மீனவ மற்றும் நீரியல்வள அமைச்சு அதிகாரி டெய்லிமிரருக்கு கூறினார்.

இதேவேளை, இந்திய கடற்பரப்பினுள் இலங்கை மீனவர்களை அத்துமீறி நுழைய வேண்டாமென மீனவ மற்றும் நீரியல்வள அமைச்சர் செனரட்ன கேட்டுக்கொண்டார்.

# மருந்து தட்டுப்பாடு ஏற்பட முன்னாள் இயக்குனர் காரணம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் அரச வைத்திய சாலைகளில் நிலவிய மருந்துப் பற்றாக் குறைக்கான முக்கிய காரணம் மருந்து விநியோகிக்கும் பிரிவைச் சேர்ந்த முன்



னாள் இயக்குனர் ஒருவரே என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னாள் இயக்குனருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன், இவர் குறித்த அறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கவும் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

அண்மைகாலத்தில் புற்றுநோய், சிறுநீரகம், நீரழிவு மற்றும் மரடைப்பு போன்ற நோய்களுக்கான மருந்து வகைகளுக்கு அரசாங்க வைத்திய சாலைகளில் பெரும் தட்டுப்பாடு நிலவியது.

இந்த பற்றாக்குறை குறித்து சுகாதார அமைச்சருடன் அண்மையில் அதிகாரிகள் குழுவொன்று விசேட பேச்சுவார்தை ஒன்றை மேற்கொண்டது.

இதன்போது அனுமதிக்கப்பட்ட கேள்வி பத்திர விநியோகத்தினை விட 50சதவீத குறைப்பு,குறிப்பிட்ட முன்னாள் இயக்குனரால் மேற் கொள்ளப்பட்டதாக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதேவேளை,24 ஆயிரம் வகையான மருந்து வகைகள்,சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் இரசாயன மருந்து வகைகள் என்பனவற்றை இறக்குதி செய்வதற்கு கிட்டத்தட்ட 450 கேள்வி பத்திர சபைகள் கூடி,அதற்கான பரிந்துரைகளை மேற்கொண்டிருந்தது.

இதுதவிர, வெளிநாட்டு மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு உரிய அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும்,சில நிறுவனங்கள் உரிய நேரத்தில் ஏற்றுமதியினை மேற்கொள்ள தவறியமையும் இந்த மருந்துப் பற்றாக்குறைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது

# எதிர்க்கட்சித் தலைவருக்கான அழைப்பை அடுத்தே அமைச்சர் பீரிஸ்,ஜெயலலிதாவிற்கு வாழ்த்துச் செய்தி

## என்கிறது கொழும்பு ஊடகம்



(கொழும்பு)

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தமிழக முதலமைச்சர் ஜெயலிதாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்த பின்னணியை கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க தலைமையிலான கூட்டணி பெருவெற்றி பெற்றும, முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்பது உறுதியாகி இருந்த நிலையில், இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அவருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக தொலைபேசி எடுத்திருந்தார்.

ஆனால் இத் தொலைபேசி அழைப்புக்கு பதில் எதுவும் இருக்கவில்லை.

அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுடன் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் மத்தியில் மிக நெருங்கிய உறவுகளை இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும், ரணில் விக்கிரமசிங்கவும் கொண்டிருந்தனர்.

இந் நிலையில், ரணில் விக்கிரமசிங்கவின் தொலைபேசி அழைப்பு தொடர்பில் அறிந்த ஜெயலலிதா, மீண்டும் அவருக்கு தொலைபேசி எடுத்துள்ளார்.

இச் சந்தர்ப்பத்தில், இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழகத்துக்கு வருகை தருமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அழைப்பு விடுத்திருந்ததை ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தன.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க வெற்றியடைந்ததையிட்டு ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்ததாகவும்,ரணில் விக்கிரமசிங்கவை தமிழகத்துக்கு வருமாறு முதலமைச்சர் ஜெயலலிதா அழைப்பு விடுத்ததாகவும் இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டிருந்தன.

இச் செய்தி இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டத்தைக் கடுப்பாக்கவே, அப்போது புதுடில்லியில் தங்கியிருந்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வாழ்த்துத் தெரிவித்து கடிதம் அனுப்பியதாக இவ்வூடகம் தெரிவித்துள்ளது.

இந்த வாழ்த்துச் செய்தியில், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் இணக்கமான போக்கை கடைப்பிடிக்க இலங்கை அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

# மீள்குடியேறிய மக்களின் வசதியின்மை குறித்த கூட்டமைப்பின் குற்றச்சாட்டை அதிகாரிகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

**மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள், வீதியோரங்களிலும், காடுகளிலும் வாழ்ந்து வருவதாகவும், அவர்களுக்கான நிவாரண விநியோகம் உரிய முறையில் சென்று சேரவில்லையெனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்த குற்றச்சாட்டுக்களை வடக்கு மாகாணத்தின் அரச அதிகாரிகள் மறுத்துள்ளனர்.**

**அத்துடன் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 888 பேர் இதுவரை மீள்குடியேற்றப் படவில்லை என்று ஐ.நா.வெளியிட்ட அறிக்கையையும் அவர்கள் மறுத்துள்ளனர்.**





வவுனியா மாவட்ட அரச அதிபர் சாள்ஸ், யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், மன்னார் மாவட்ட அரச அதிபர் வேதநாயகன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் ஆகியோரே மேற்கண்ட குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளனர்.

உள்நாட்டிலும் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் திட்டத்திற்குத் தாமே பொறுப்பெனவும், இவ்வாறு மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், நிவாரண உதவிகளை வழங்குதல் போன்ற வாழ்வாதாரத் திட்டங்களை ஏற்படுத்தும் செயற்பாடு நீண்ட காலத்தை நோக்காகக் கொண்டதாகும். இந்தத் திட்டங்களை மத்திய, மாகாண அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றோம்.

இடம்பெயர்ந்த சில குடும்பங்கள் தமது உறவினர் மற்றும் நணபர்கள் வீடுகளில் தங்கியுள்ள னர். இவ்வாறு அவர்கள் தங்கியிருந்தாலும் அவர்களுக்கு உதவிகள நிவாரணங்கள் வழங்கப்படவில்லை என அர்த்தப்படுத்தக் கூடாது. இவ்வாறு தங்கியுள்ளவர்களை அவர்களது சொந்த இடங்களுக்குத் திரும்புமாறு நாம் வற்புறுத்த இயலாது. அவ் வாறு நாம் செய்தால் அது மனித உரிமை மீறலாக அமையும்.

அரசாங்கம் மீள்குடியமர்ந்த மக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி வருவதுடன், நீண்ட காலத்திட்டங்களும் செயற படுத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவிக்கையில்-

யாழ்.மாவட்டத்தில் 15ஆயிரத்து 495 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரம் பேரே மீள்குடியமாத்தப்பட வேண்டியர்களாக உள்ளனர். ஆனால் ஐ.நா.தெரிவித்துள்ளது போல் 94 ஆயிரத்து 371 பேர் மீள்குடியேற்றத்துக்காகக் காத்திருக்கவில்லை.

கடந்த 20 வருடங்களுக்குப பண்ணா உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு மீள்குடியேற்றம் விரைவு படுத்தப்பட்டு வருகின்றது. அண்மையில் கூட 9 கிராம சேவகா பிரிவில் மீள்குடியேற்றம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இடத்தில் கூட்டுறவுக் கிளைகள், பாடசாலைகள், நீர்விநியோகம், சுகாதார வசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடுகளுக்காக உலக வங்கி 1500 மிலலியன் ரூபாவை அண்மையில் ஒதுக்கியுள்ளது.

பத்தாயிரம் வீடுகள் கட்டடப்பட உள்ளதுடன், மேலும் பத்தாயிரம் வீடுகளின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்து வருகின்றன. மீள்குடியேறிய மக்களுக்காக ஐயாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. மிகுதி 20 ஆயிரம் ரூபாவும் யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்படும்.

யாழ்.நகர் உட்பட குடாநாட்டின் ஏனைய பகுதி மக்களும் மிகவும் மகிழ்வாக, சுதந்திரமாக வாழ்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

மெனிக்பாம் முகாமில் ஆரம்பத்தில் மூன்று லட்சம் மக்களே இருந்தனர். ஆனால் தற்போது 14 ஆயிரமாக அந்தத் தொகை குறைவடைந்துள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் சாள்ஸ் தெரிவித்தார்.

இவ்வாறு தங்க வைக்கப்பட்டுள்ளவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்படாத பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். நிவாரண நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் சுதந்திரமாகச் சென்றுவர எவ்வித தடையும் இல்லை எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 37 ஆயிரத்து 515 குடும்பங்களைச் சேர்ந்த 1 லட்சத்து 18 ஆயிரத்து 918 பேர் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். கண்ணிவெடி அகற்றபபடாத முகமாலை, கிளாலி, வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளிலேயே மீள்குடியமர்வுப் பணிகள் தாமதமாகின்றன.

வீதியோரங்களிலும், காடுகளிலும் மக்கள் வசிப்பதாக எனககு எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லையென மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸவரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் கிராம சேவகர் பிரிவைத் தவிர மற்றய பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். முள்ளிக்குளத்தில் மட்டும் 300 குடும்பங்களை மீள்குடியேற்ற வேண்டியுள்ளதாக அரச அதிபர் வேதநாயகன் தெரிவித்தார்.

## இந்தியக் கடற்படை கைது செய்த 20 இலங்கை மீனவர்கள் விடுவிப்பு



(கொழும்பு)

இந்தியக் கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடித்தார்கள் எனத் தெரிவித்துக் கைது செய்யப்பட்ட இருபது இலங்கை மீனவர்களும் அவர்களது நான்கு படகுகளையும் இலங்கைக் கடற்படையினரிடம் இந்திய கரையோரக் காவற்படையினர் கையளித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்தக் கையளிப்பு நிகழ்வு இரு நாடுகளின் கடல் எல்லையில் நடைபெற்றதாகக் கரையோர காவற்படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு கடற்பகுதியில் இலங்கை கடலோர காவற்படை ஆறு அதிவேக ரோந்துப் படகுகள் மற்றும் இரண்டு காரையோரக் கப்பல்களில் கடற படையினர் உதவியுடன் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்காலத்தில் கரையோரக் காவற்படையினர் இலங்கையிலுள்ள அனைத்துத் துறைமுகங்களிலும், தமது காவற்கடமையை மேற்கொள்ளவுள்ளனர். இதன் முதற்கட்டமாக மேற்கு மற்றும் தென்பகுதி மீன்பிடித் துறைமுகங்களின் தமது கடமையை ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்தத் துறைமுகளிலிருந்து காவற்பணியில் ஈடுபடும் இவர்கள் சகல மீன்பிடிப் படகுகளையும் பதிவு செய்வதுடன் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் மீளவும் கரை திரும்பி வருகின்றமை தொடர்பாக கண்காணிப்பையும் மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் உயிர்காப்பு அங்கிகளை மீனவர்கள் கொண்டு செலகின்றனரா? என்பது குறித்தும் கண்காணிக்கப்படுவதுடன், அவ்வாறு அவற்றைக் கொண்டு செலலத் தவறும் மீனவர்களுக்கு அதன் முக்கியத்துவம் குறித்து அறிவுறுத்தல் வழங்கப்படுமென பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## இரண்டு பிரதான சட்டங்களை நீக்குவது குறித்து ஆலோசனை

(கொழும்பு)

பயங்கரவாத் தடைச்சட்டம், அவசர காலச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக அரசாங்கம் ஆலோசனை நடத்தி வருவதாக சட்டமா அதிபர் மொகன் பீரிஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் என்பனவற்றை நீக்குவது தொடர்பாக ஆலோசனைகள் நடத்தப்படுகின்றன.

எனினும் இதுபற்றி இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை. அவசரகாலச்சட்ட விதிகளில் எவற்றை நீக்கலாம். எவற்றைத் தொடர்ந்து வைத்திருக்கலாம் என்பது பற்றி ஆராயப்பட்டு வரு கிறது.

இலங்கையில் 1978ஆம் ஆண்டில் தற்காலிக ஏற் ாடாகக் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் 6 மாதங்களுக்கு ஒருமுறை நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் நீடிக்கப்பட்டு வந்தது.

பின்னர், 1982 இல் இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிரந்தரமாக அங்கீகரிக்கப்பட்டு, கடந்த 32 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. இலங்கையில் 2002 இல் நீக்கப்பட்ட அவசரகாலச்சட்டம் 2005ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## தரக்குறைவான நடவடிக்கைகளில் உயர்கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது

### விரிவுரையாளர் சம்மேளனம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தாம் முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கையை பயன்படுத்தி பல்கலைக்கழகங்களில் உள்ள ஏனைய ஊழியர்களை உயர்கல்வி அமைச்சு சிரமத்துக்குள்ளாக்க முயற்சிப்பதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

ஊழியர்களின் சம்பளப் பட்டியலில் பல்கலைக்கழகங்களின் பிரிவு பொறுப்பதிகாரி கையெழுத்திட வேண்டும் என பல்கலைக் கழகங்களின் மானியங்களின் ஆணைக்குழு விடுத்துள்ள சுற்று நிரூபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹின் மென்டீஸ் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் பல்கலைக் கழக பிரிவு பொறுப்பதிகாரிகளாகப் பதவி வகித்த விரிவுரையாளர்கள் ஏற்கனவே தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விரிவுரையாளர்கள் தாம் வகித்த பதவிகளை இராஜினாமாச் செய்துள்ள நிலையில் எழுதுவினைஞர்கள், சிற்றூழியர்கள் உள்ளிட்ட ஏனையவர்களின் சம்பளத்தை நிறுத்தும் முயற்சியை அனுமதிக்க முடியாது எனவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

சம்பளப் பட்டியலில் பிரிவு பொறுப்பதிகாரியாகச் செயற்பட்ட விரிவுரையாளர் கையொப்பமிட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பல்கலைக் கழகத்தின் ஏனைய ஊழியர்களின் சம்பளத்தைத் தடுக்கும் தரக் குறைவான முயற்சியில் உயர் கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளதெனவும் கலாநிதி மஹின் மென்டீஸ் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சுற்று நிரூபங்களை வெளியிடுவதை நிறுத்த தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பிலான பேச்சுவார்த்தைகளுக்கு அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரச்சினைகளை மேலும் வலுப்பெறச் செய்யும் முயற்சிகளை கைவிட்டு அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கு வரும் வரை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளதாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்னவிடம் வினவினோம்.

பதவிகளை இராஜினாமா செய்த விரிவுரையாளர்கள் மீணடும் அந்தப் பதவிகளை பொறுபபேற்றால் பிரச்சினைகளுக்குத் தீரவு கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

## வறிய நிலையிலுள்ள குடும்பங்களுக்கு வணிகர் கழகத்தால் சுயதொழில் உதவி

(யாழ்ப்பாணம்)


மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் யாழ்.வணிகர் கழகம் பல்வேறு உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றது. இதன்படி நேற்றுக்காலை காரைநகர் பிரதேச செயலகத்தில் வைத்து வறியநிலையில் வாழும் பத்துக் குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சியாகக் கோழிக் குஞ்சுகளும் அதற்கான உபகரணங்களும் வழங் கப்பட்டன.

காரைநகர் பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி இணைப்பாளர் மொன்ரினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பத்துக் குடும்பங்களிற்கு 30 கோழிக் குஞ்சுகள், ஒரு மூடை மாஸ், கோழிக்குத் தண்ணீர் வைப்பதற்கான தண்ணீர்ப் பாத்திரம் மற்றும் கோழிகளை வளர்ப்பதற்கான கூடு என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக ஊழியர்கள், வணிகர் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (86)

# புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் அடைக்கலம் வழங்க விரும்பிய நோர்வே

## என்கிறார் குணதாச அமரசேகர



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நோர்வேக்கு அழைத்துச் சென்று அடைக்கலம் வழங்கவே நோர்வே விரும்பியது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த 12 பேருக்கு அடைக்கலம் வழங்கியுள்ளது என்பது ஆச்சரியமான ஒரு விடயம் அல்ல.

ஏனெனில் போர் நடைபெற்ற காலத்தில் கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் விடுதலைப் புலிகளின் அலுவலகம் போலவே செயற்பட்டுவந்தது.

நோர்வே தூதரகம் விடுதலைப்புலிகளுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வந்திருந்தது. அமைதி முயற்சிகளின் அனுசரணையாளர்கள் போல நோர்வே செயற்பட்டாலும், அவர்களின் நடவடிக்கைகள் முற்றிலும் மாறுபட்டது.

பிரபாகரனையும் தமது நாட்டுக்கு அழைத்துச் சென்று அடைக்கலம் வழங்கவே நோர்வே விரும்பியது.

ஆனால் தற்போது விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களை அது பாதுகாத்து வருகின்றது என குணதாச அமரசேகர மேலும் தெரிவித்துள்ளார்

# ஜி.எஸ்.பி வரிச்சலுகை இழப்பால் பெருமளவானோர் தொழில் இழப்பு

## ஒத்துக்கொள்கிறார் பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம்


(கொழும்பு)

ஜி.எஸ்.பி வரிச்சலுகை விலக்கிக் கொள்ளப்பட்டதால் சில தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதையும், ஆயிரக்கணக்கானவர்கள் வேலை இழந்துள்ளதையும் அரசின் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம் ஏற்றுக் கொள்கிறார் என பீபீசி செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, வேலை இழநதவர்களுக்கு மாற்று வேலைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசின் நிலைப்பாடு களத்திலிருக்கும் உண்மைகளை பிரதிபலிக்கவில்லை என்று அரசியல்வாதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

# பத்து இலட்சம் கையெழுத்து மனு விரைவில் கையளிக்கப்படும்



(கொழும்பு)

ஐ.நா.சபை நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராக திரட்டப் பட்ட பத்து இலட்சம் கையெழுத்துக்கள் கொண்ட மனுவை இன்னும் சில நாட்களில் கையளிக்கவுள்ளதாக தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் சி.பி.இரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள ஐ.நா. சபை பிரதிநிதி ஊடாக இதைக் கையளிக்க உள்ளதாகவும், இது தவிர வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலமும் இலங்கையின் எதிர்ப்பைத் தெரிவிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### வெசாக் பண்டிகைக் காலத்தில்

# சட்ட விரோத செயலில் ஈடுபட்ட 21 பெண்கள் உட்பட 10 பேர் கைது

(கொழும்பு)

வெசாக் காலத்தில் மதுவரித் திணைக்களம் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது 21 பெண்கள் உட்பட 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 18 பேர் சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்தமையாலும் 50 பேர் கசிப்பு விற்றமையாலும் 28 பேர் அனுமதி யில்லாமல் மதுபானம் விற்றமையாலும் இரண்டு பேர் அனுமதியின்றி வெளிநாட்டு மதுபானம் விற்றமையாலும் இன்னும் இருவர் கள் வைத்திருந்தமையாலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம், ஜாஎல, சீதுவ, நீர்கொழும்பு, கொழும்பு, தெஹிவளை, ரத்மலான, ஹோமாகம, தெஹியேவிட்ட ருவான் வெல்ல, அவிசாவளை, ராகாம, களனி, பண்டாரகம, ஆன மடுவ மற்றும் மினுவாங்கொட ஆகிய பிரதேசங்களிலேயே இந்த கைதுகள் இடம்பெற்றுள் ளன.

இதன்போது ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மதுபானம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. குறித்த தேடுதல் நடவடிக்கை பொதுமக்களின் தகவல்களுக் கிணங்க மதுவரித் ஆணையாளர் வசந்த ஹப்புவாரச்சி மற்றும் மதுவரி அத்தியட்சகர் உபுல் செனவிரத்ன ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் கொழும்பு விசேட மதுவரிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் அதிகமானவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ள நிலையில் சில வழக்குகள் நிலுவையிலுள்ளதாக செனவிரத்ன தெரிவித்தார்.

# ஐயாயிரம் அபராதம்

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த பளை வாசி ஒருவருக்கு சாவகச சேரி நீதிமன்றத்தினால் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபருக்கு எதிராக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டதால், அவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும், செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (11)

# வாக்காளர் பதிவேடு மறுசீரமைப்பு பிரச்சினைகள் குறித்து கண்டறிவு

## பவ்ரல் அமைப்பு கூறுகிறது

(கொழும்பு)

வாக்காளர் பதிவேடு மறு சீரமைப்பு செயற்பாடுகளின் போது ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து கண்டறியப்பட்டுள்ள்தாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுவரை கண்டறியப்பட்டுள்ள பிரச்சினைகளை பட்டியற்படுத்தி வருவதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கும், அரசியல் கட்சிக ளுக்கும் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

2010 ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவேடு மறுசீரமைப்பின் பிரகாரம் வாக்காளர்களை தெளிவுபடுத்தும் வேலைத் திட்டத்தை தமது அமைப்பு நடைமுறைப்படுத்தியிருந்ததாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் வாக்காளர்களை மையமாகக் கொண்டு பிரச்சினைகளை கண்டறிவதற்கான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கூறினார்.

2011 ஆம் ஆண்டின் வாக்களார் பதிவேடு மறுசீரமைப்புக்கு முன்னதாக ஏற்கனவே அடை யாளம் காணப்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து சம்பந்தபட்ட தரப்பினருக்கு தெளிவுபடுத்த எண்ணியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வலிகாமம் வலய தமிழ்மொழித்தினம் 2011 போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட வலய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு -

*பிரிவு 1 - தரம் 4,5*

*வாசிப்பு*

ஜெ.உமாசுதன் (யாழ்ப்பாணக் கல்லூரி), ர.பவித்தனன் (கந்தரோடை தமிழ்.க.வி), லோ.கிரிசதன் (அளவெட்டி தெற்கு றோ.க.பா), டா. டயஸ் ஆன் எமிலினி (இளவாலை கன்னியர்மடம் ம.வி).

*பிரிவு -2 தரம் 6,7*

அ.ஜாமினி (மானி. சென்.ஆன்ஸ் றோ.க.த.க.பா), ஜெ.வினோதினி (வட்டு மத்திய கல்லூரி), செ.நிஷாஷனி (இளவாலை கன்னியர்மடம் ம.வி).

*பிரிவு - 2 தரம் 4, 5*

*ஆக்கத்திறன் வெளிப்பாடு*

ச. செந்தில்குமார் (வட்டு சுப்பிரமணிய வி.), தி.அட்சயன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), க.வித்தகன் (மகாஜனாக் கல்லூரி).

*பிரிவு 1 - தரம் 4,5*

*பேச்சு*

சா.துஷாந் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), தி.மேனுசன் (மானிப்பாண் சோதிவேம்படி வித்.), ஜெ.ரேகா (மகாஜனாக் கல்லூரி), சி.கெரிஸ்ரிகா (வட்டு கார்த்திகேய வி.).

*பிரிவு -2 தரம் 6, 7*

த.ஜானுஷா (மானி. மகளிர் கல்லூரி), சே.அபிநயா (யாழ்ப்பாணக் கல்லூரி), மு.தர்சிகா (யாழ்.பெண்கள் உயர்தரப் பாடசாலை).

*பிரிவு -3 தரம் 8,9*

ம.மோகனதாரணி (மானி. மகளிர் கல்லூரி. ம.தரண்யா (மகாஜனாக் கல்லூரி), ர.கஸ்தூரி (யாழ். யூனியன் கல்லூரி).

*பிரிவு -4 தரம் 10,11*

வி.ஸ்ரீசுபாங்கி (யாழ்.வட்டு மத்திய கல்லூரி), பா.ஜெனனி (யாழ். பண்ணாகம் மெய்கண்டான் மா.வி), கே.கௌசிகன் (மகாஜனாக் கல்லூரி).

*பிரிவு -5 தரம் 12, 13*

யோ.றொபின்ஸ் கமில்டன் (யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), நா.கார்த்திகா (யாழ்.பண். பெண்கள் உயர் பாடசாலை), வை.ஜீவலோஜினி (வயாவிளான் மா.வி), வி.ஸ்ரீமாதங்கி (வட்டு இந்துக் கல்லூரி).

*பிரிவு 1 - தரம் 4, 5*

*பாவோதல்*

லி. தீபிகா (மகாஜனாக் கல்லூரி), க.ரோணுகா (சரஸ்வதி மா.வி), யோ.ஸ்ரீஹீரன் (யாழ்ப்பாண் கல்லூரி).

*பிரிவு -2 6,7*

லோ.ஸ்ரீஹர்சன் (யாழ்ப்பாண் கல்லூரி), ச.நிரோஜா (வயாவிளான் ம.ம.வி), அ.ஜான்சலின் (கந்தரோடை தமிழ் க.வி).

*பிரிவு 3 - தரம் 8,9*

அ.அமிர்தவரஷினி (மானி.மகளிர் கல்லூரி), ம.சகானா (மகாஜனாக் கல்லூரி), ஞா.அபர்ணா (அராலி சரஸ்வதி).

*பிரிவு -4 தரம் 10, 11*

ஸ்ரீ.ஜெனித்திரா (வயாவிளான் ம.ம.வி), சி.அர்சனா (மானி. மகளிர் கல்லூரி), பு.வதுர்ஷன் (மூளாய் சைவப் பிரகாச வி).

*பிரிவு 5 - தரம் 12, 13*

இ.மேருஷா (மா.மகளிர் கல்லூரி), ஜெ.பிறினியா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ம.தட்சாயினி (யாழ்ப்பாணக் கல்லூரி). த.துஜிபா (மாதகல் சென். ஜோசவ் ம.வி).

*பிரிவு 1 - தரம் 4, 5*

*இசையும் அசைவும்*

உ.சுதர்சனா (ஏழாலை தெற்கு அ.மி.த.க.பா), மோ.விதுசனா (மாதகல் சென்தோமஸ் வித்.), ர.மதுமிதா (மகாஜனாக் கல்லூரி).

*பிரிவு 2- தரம் 6,7*

*இசை தனி*

சு.சஞ்சிகா (மகாஜனாக் கல்லூரி), கு.குணசர்மிலா (இராமநாதன் கல்லூரி), சு.யதுர்சன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

*பிரிவு 3 - தரம் 8,9*

வி.கல்யாணி (இணுவில் மத்திய கல்லூரி), ந.கபில்ராஜ் (சண்டிலிப்பாய் இந. கல்லூரி), சி.திபாஜினி (இராநாதன் கல்லூரி).

*பிரிவு 4- தரம் 10, 11*

இ.அபிராமி (மகாஜனாக் கல்லூரி), தி.ஜனனி (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி), த.தர்சிகா (வட்டு மத்திய கல்லூரி).

*பிரிவு 5 - தரம் 12, 13*

வை.பிரதீபன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), ந.துஷாந்தி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ஜெ.தேவரூபி (இராமநாதன் கல்லூரி).

*குழு I - 6, 7 இசை குழு*

உடுவில் மகளிர் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி,

*குழு II - தரம் 10*

சங்கானை சிவப்பிரகாச ம.வி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி.

*பிரிவு 2 - தரம் 6,7*

*தனி நடனம்*

த.துஷியந்தி (சுழிபரம் விக்ரோறியக்காலல்லூரி), ம.துஷாரா (மகாஜனாக் கல்லூரி), து.நுர்மிளா (வயாவிளான் ம.ம.வி).

*(தொடர்சி..நாளை)*



# பேசினால் போதும்

செல்போனில் பேசினால் மறதி குணமாகும்" என புதிய ஆய்வில் தெரிய வந்துள்ளது. "அல்கூஷ் கெய்மெர்கூஷ்" என்ற மறதி நோயினால் உலகில பலர் அவதிப் பட்டுவருகின்றனர்.

மூளையில் உள்ள செல்கள் கொஞ்சம் கொஞ்சமாக செயல்இழப்பதால் இந்த நோய் உருவாகிறது. இந்த நோயை ஜேர்மனியைச் சேர்ந்த "ஆலியோஸ்" என்ற விஞ்ஞானி கடந்த 1906-ஆம ஆண்டு கண்டு பிடித்தார். அன்று முதல் இந்த நோயை குணப்படுத்த விஞ்ஞானிகள் தீவிரமாக முயன்று வருகின்றனர்.

இந்த நிலையில், தற்போது தான் இந்த நோயை குணப்படுத்த புதிய யுக்தி ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். தொடர்ந்து செல்போன் பேசுவதன் மூலம் இந்த நோயை குணப்படுத்தலாம் என ஆய்வு மூலம் தெளிவு படுத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் தெற்கு புளோரிடாவில் உள்ள பல்கலைக் கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்த புதிய ஆய்வை மேற்கொண்டனர். இவர்கள் 96 எலிகளுக்கு நாள் ஒன்றுக்கு இருமுறை செல்போன்கள் மூலம் எலக்ட்ரோ மேக்னடிக் அலை கற்றைகளை ரிமோட் கண்ட்ரோல் மூலம் பாய்ச்சினர்.

இதன் மூலம் அல்ஷ்கெய் மெர்ஷ் நோயினால் பாதிக்கப்பட்ட எலிகளின் நினைவாற்றல் அதிகரித்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மறதி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் செல்போனில் உள்ள எலக்ட்ரோ மேக்னடிக் அலைக் கற்றைகள் மூலம் சிகிச்சை அளித்து குணப்படுத்த முடியும் என்ற முடிவுக்கு ஆராய்ச்சியாளர்கள் வந்துள்ளனர்



# முதுகு வலிக்கு தீர்வு

முள்ளந்தண்டில் ஏற்படும் பாதிப்புக்களால் தோன்றும் முதுகு வலிகளுக்கு எவ்வளவுதான் மருந்துகளை நாங்கள் பாவித்தாலும், அது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நிவாரணத்தை அளிக்காது. இலட்சக்கணக்கானவர்கள் இந்தப் பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தகைய பிரச்சனையைத் தீர்ப்பதற்கு பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் புதிதாக ஒரு ஜெல் வகையைக் கண்டுபிடித்துள்ளனர். இது ஆயிரக்கணக்கான நுண்சேர்க்கைகளைக் கொண்டது. உடலுக்குள் ஊசி மூலம செலுத்தப்பட்டதும், இந்த நுண் துணிக்கைகள் உடலுக் குள் ஒன்று சேர்ந்து முள்ளந்தண்டுத் தட்டுக்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை சரி செய்யக்கூடியது.

80 சதவீதமான மக்கள் தங்களது ஆயுள் காலத்தில் ஏதோ ஒருகட்டத்தில் முதுகு வலியால் அவஸ்தைப்படுகின்றனர். பெரும்பாலும் 50 வயதுக்கு மேற்பட்டவர்களை இது தாக்குகின்றது. முள்ளந்தண்டில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதி மட்டுமே சத்திர சிகிச்சை மூலம் குணப்படுத்தப்படுகின்றது .

இவ்வாறான சத்திர சிகிச்சையின் பின் நோயாளி குணமடையவும் நீண்ட காலம் செல்லும். ஆனால இந்தப் புதிய ஜெல் ஊசி மூலம் ஏற்றப்படுவதன் மூலம் நோயாளி ஓரிரு தினங்களில் குணமடைந்து இயல்பு நிலைக்கு வந்து விடுகின்றார். மன்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் 25 வருடங்கள் நடத்தப்பட்ட ஆய்வின் பின் இந்த ஜெல் வெற்றியளித்துள்ளது.கோடிக் கணக்கான துணிக்கைகள் திரவ வடிவில் உடலுக்குள் செலுத்தப் பட்டதும் அவை உடலுக்குள் ஒன்று சேர்ந்து ஜெல்லாக மாறி உரிய பலனை அளிக்கின்றன என்று விஞ்ஞானிகள் விளக்கமளித்துள்ளனர்.

# கண் மூடினால் எடை குறையும்



கண்களை மூடினால் உடல் எடை எப்படி குறையும்? என்ற கேள்வி எல்லோருக்கும் எழும். ஆனால் இது மனோதத்துவ முறை சிகிச்சையில் சாத்தியமாகும் என்கின்றனர உளவியல் ஆய்வாளர்கள்.

இப்படி ஒரு புது மருத்துவ தெரபி, இந்தியாவின மும்பை, பெங்களூர், டில்லி என சென்னையில் கால் பரவி, தற்போது பதித்துள்ளது. மனோதத்துவ ரீதியான பயிற்சியினால், கண்களை மூடும் போது உள்ளத்தில் மாற்றம் நிகழும். அதுவே உடலில் வெளிக் காட்டப் பட்டு, எடைதானாக குறையும்.

மனதின் இயல்பான நிலைக்கு ஹிப்னோசிஸ் என்று பெயர். நாம் விழித்திருக்கும் போது மனது ஒரு மாதிரியாகவும், தூங்கும்போது வேறு மாதிரியாகவும இருக்கும். ஆனால நாம மெய்மறந்த நிலையில் ஆழ்நிலையில் இருக்கும் போது உடலில் பல மாற்றங்கள் நிகழும்.

மருத்துவ ரீதியாக செய்யப்படும் இந்த ஹிப்னோதெரபியில் மனிதனின் இயல்பான மனம் விசுவரூபம் எடுக்கும்போது, அதன் விளைவுகளால் உடலில் பல கோளாறுகள் குணமாகின்றன. இதை நான்கு முதல் ஆறு வாரம் வரை செய்ய வேண்டும். மன அழுத்தம் குறையும்போது உடல் சீராகி, எடையும் சீராகும்.



# செயற்கை மேகங்கள்

விளையாட்டு மைதானங்களை குளிர்ச்சியாக வைத்திருப்பதற்காக, செயற்கை மேகத்தை கல்லூரி பேராசிரியர் ஒருவர் உருவாக்கியுள்ளார். இந்த செயற்கை மேகம், 2022இல் நடக்க உள்ள உலகக் கோபபை கால்ப்பந்து போட்டியில் பயன்படுத்தப்பட உள்ளது. கத்தார் பல்கலைக்கழகத்தில், மெக்கானிக்கல் இன்ஜினியரிங் துறை பேராசிரியராக பணியாற்றி வருபவர் சாவூத் அப்துல் கனி.

இவரது தலைமையிலான விஞ்ஞானிகள் குழுவினர், திறந்தவெளி விளையாட்டு மைதானங்களில், வெயில் மற்றும் வெப்பத்தை தடுத்து, குளுமையாக வைத்திருப்பதற்காக, செயற்கை மேகத்தை உருவாக்கி வருகின்றனர். திறந்தவெளி விளையாட்டு மைதானங்களில், வெய்யிலை தடுப்பதற்காக, செயற்கை மேகத்தை உருவாக்கி வருகிறோம். இது, 100 சதவீத கார்போனிக் பொருட்களாலானது என்று சாவூத் அப்துல் கனி தெரிவித்திருக்கின்றார்.


இந்த செயற்கை மேகத்தை,ரிமோட் கன்ட் ரோல் மூலம் இயக்க முடியும். இதனால், நாம் விரும்பும் இடத்தில்,இந்த மேகத்தை நகர்த்தி வைத்து கொள்ளலாம். 2022ஆம் ஆண்டில்,தோகா நாட்டில் நடக்கும் உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் போது,இந்த செயற்கை மேகம் பயன்படுத்தப்பட உள்ளது. மேலும், கடற்கரை, கார் நிறுத்துமிடங்கள் போன்ற இடங்களில் பயன்படுத்தும் விதத்தில், செயற்கை மேகங்களை உருவாக்கி வருகிறோம். இதை,மொபைல் போன்கள் மூலம் இயக்கலாம். இதன் துவக்க விலை,23 லட்ச ரூபாய். எனினும், இது விற்பனைக்கு வரும் போது, இதன் விலை, கூடவோ,குறையவோ செய்யலாம். இவ்வாறு சாவூத் அப்துல் கனி கூறினார்.

# நவீன உபகரணங்கள்



சாதாரண பொருட்களைக் கொண்டு கலைநயம் மிக்க பொருட்களைக் வடிவமைத்து வருவதை தற்போது காண முடியும் இங்கு காணப்படும் படத்தைப் பாருங்கள் வித்தியாசமான வடிவங்களில் வீட்டு அலங்காரப் பொருட்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. முயன்று பாருங்கள் சில வேலை உங்கள் வீடுகளும் அவ்வாறான பொருட்களால் அழகு பெறலாம்.

# மவுஸ் (mouse)



நீங்கள் உங்கள் கணனியில் browsing அல்லது ஏதாவது வேலை செய்து கொண்டே உங்கள் இரத்த அழுத்தத்தை அறிந்து கொள்ளலாம். இந்த MD Mouse ஒரு விசேட வகை computer mouse ஆகும். இதில் blood pressure monitor இருப்பதால் நீங்கள் கணனியில் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுதே எந்த வித சச்சரவும் இல்லாமல் உங்கள் இரத்த அழுத்தத்தை அறிந்து கொண்டே இருக்கலாம். இந்த MD Mouse இல் உங்கள் இரத்த அழுத்தத்தை அறிய வேண்டும் எனின் உங்கள் விரலை அதில் உள்ள flip;out finger cuff இல் வைத்தால் போதும். அதில் இருக்கும் Software உங்கள் இரத்தக்கொதிப்பை ஆராய்ந்து கூறுவது மட்டுமன்றி அதனைப் பதிவு செய்யும் திறனையும் கொண்டுள்ளது. இந்த விசேட வகை மவுஸை நீங்களும் பயன்படுத்தி பயன்பெறுங்கள்.

# ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரதமர் மன்மோகன், சோனியா கூட்டறிக்கை



(புதுடெல்லி)

ஊழல் குற்றவாளிகளுக்கு சட்டப்படி கடும் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் 2 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் பிரதமர் மன்மோகன்சிங், சோனியா ஆகியோர் உறுதி அளித்தனர்.

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு 2 ஆவது முறையாக பதவி ஏற்ற 2 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் டெல்லியில் கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, அரசின் செயற்பாடு குறித்து மக்களுக்கு அறிக்கை ஒன்றை பிரதமர் மன்மோகன்சிங், ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் சோனியா காந்தி ஆகியோர் நேற்று முன்தினம் இரவு வெளியிட்டனர். அதில், ஊழல் குற்றம் புரிந்தவர்கள் உரிய சட்டத்தின் படி தண்டிக்கப்படுவார்கள் என்று அவர்கள் உறுதி யளித்துள்ளனர்.

நாங்கள் இதை வெறும் வார்த்தையால் மட்டும் சொல்லவில்லை கடுமையான நடவடிக்கை மூலம் செயற்படுத்திக் காட்டுவோம் என்றும் அந்த அறிக்கையில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.


அதில் மேலும் கூறி இருப்பதாவது-

2 ஜி ஸ்பெக்ட்ரம், கொமன் வெல்த் முறைகேடு போன்று மத்திய, மாநில அரசு நிர்வாகத்தில் பல்வேறு ஊழல் புகார்கள் நாட்டு மக்களை கவலை கொள்ள வைத்துள்ளது.

இதில் தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனை கிடைக்கச் செய்ய அரசு உறுதி பூண்டு உள்ளது. அதற்காக பல்வேறு நடவடிக்கைகள் தொடங்கி விட்டன. ஊழலை ஒழிப்பதற்காக மத்திய அமைச்சர்கள் குழு ஒன்று கடந்த ஆண்டு ஜனவரி மாதம் அமைக்கப்பட்டு உள்ளது.

பொது நலன் கருதி அரசு அதிகாரிகளின் சொத்துக் கணக்குகளை வெளியிட வகை செய்யும் சட்ட மசோதா வும், ஐ.நா.சபை மாநாட்டு முடிவுப்படி வெளிநாடுகளில் பணிபுரியும் அதிகாரிகளின் ஊழலை தடுக்க வகை செய்யும் சட்ட மசோதாககளும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டு பாதுகாப்பை பொருத்தவரை, முப்படைகளை நவீனப்படுத்துவதுடன், உள்நாட்டிலேயே நவீன ஆயுதங்களை தயாரிக்கவும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. நடப்பு ஆண்டில் டெல்லியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மீது நடந்த தாக்குதல், வாரணாசியில் நடந்த குறைந்த சக்தி கொண்ட குண்டு வெடிப்பு தவிர தீவிரவாத தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை.




# அழகிரியைக் காணவில்லையாம் தமிழகத்தைக் கலக்கும் போஸ்டர்




(புதுடில்லி)

2011 ஆம் ஆண்டு சட்ட மன்ற தேர்தலுக்கு பிறகு அ.இ.அ.தி.மு.க., என்ற கட்சியே காணமால் போயவிடும் என்று கூறிய ,மு.க. அழகிரியை காணவில்லை - விபரம்

பெயர் : மு.க.அழகிரி

அப்பா பெயர் :தட் சிணாமூர்த்தி (எ) கருணாநிதி

பிறந்தது : சென்னை,கோபாலபுரம்

வளர்ந்தது : மதுரை அவணியாபுரம்

வேலைபார்ப்பது : ஆங்கிலம், இந்தி தெரியாத மத்திய அமைச்சர்

சாதனை : தா.கிருஷ்ணன் கொலை, ஆலடிஅருணா கொலை....

இவரைப் பற்றிய தகவல் தெரிவிப்பவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்

இவன் எம்.ஜி.ஆர்.வாசன், பகுதிகழக செயலாளர், திருவல்லிக்கேணி. 9941172464

இப்படிப்பட்ட வாசகங்களுடன் வண்ணத்தில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டரை பலரும் நின்று படித்து செல்கின்றனர், அதிலும் ஆங்கிலம்,இந்தி தெரியாத மத்திய அமைச்சர் வேலை என்ற வார்த்தையை படித்துவிட்டு சிரிக்கின்றனர்.

# டில்லி சென்றார் கருணாநிதி

(சென்னை)

ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைதான கனிமொழி டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் அதே சிறையில் முனனாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவும் கலைஞர் ரி.வி. நிர்வாக இயக்குனர் சரத்குமாரும் அடைக்கப்பட்டுள்ளனர்.


இவர்களை நேரில் பார்ப்பதற்காக தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்றுக் காலை 9.50 மணிக்கு டில்லி புறப்பட்டார். அவருடன் துரை முருகன், பொன்முடி ஆகியோரும் சென்றனர்.

பகல் 11.30 மணியளவில் விமானம் டெல்லி சென்றது. கருணாநிதியை விமான நிலையத்தில் டி.ஆர்.பாலு மற்றும் தி.மு.க.வினர் வரவேற்றனர்.

கடந்த சனிக்கிழமை கனிமொழியை அவரது தாயார் ராஜாத்தி அம்மாள் சந்தித்து பேசினார். அவர் இப்போது டெல்லியில் தங்கியுள்ளார். கருணாநிதி டெல்லி சென்றதும் அவரும் கனிமொழியை சந்திப்பார். மத்திய மந்திரி அழகிரி இப் போது டெல்லியிலுள்ளார். அவரும் கனிமொழியை சந்தித்துப் பேசுவார் என்று தெரிகிறது.

# தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க படுதோல்வி அடையும்

## முன்னரே கணித்த தயாநிதிமாறன்



(புதுடெல்லி)

சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. படுதோல்வி அடையும் என்று அக்கட்சியின் மத்திய அமைச்சர் ஒருவர் முன் கூட்டியே கணித்துள்ளார்.

தேர்தலில் படுதோல்வி, 2ஜி வழக்கில் தி.மு.க. எம்.பி. கனிமொழி கைது என தி.மு.க.வுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக ஏற்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் இதெல்லாம் நடக்கும் என இதுகுறித்த அமெரிக்க தூதரகத்தின் கேபிளை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

திமுக தோல்வி அடையும் என்பதை 2008 ம் ஆண்டிலேயே மத்திய அமைச்சரும், கருணாநிதியின் பேரனுமான தயாநிதிமாறன் கணித்துள்ளார்.

தி.மு.க மீது படிந்துள்ள ஊழல் கறையை அகற்றா விட்டால் கட்சிக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் மாறன் தெரிவித்துள்ளார். மாறன் இவ்வாறு தெரிவித்ததாக அமெரிக்க வெளியுறவுத் துறைக்கு அந்நாட்டின் தூதரக அதிகாரி டேவிட் ஹுப்பர் தகவல் அளித்துள்ளார்.

அதிகாரத்துக்கு வருபவர்கள் கவனத்தை இழந்து பணம் சேர்ப்பதிலேயே குறியாக இருக்கின்றனர் என தயாநிதி மாறன், டேவிட் ஹுப்பரிடம் தெரிவித்துள்ளார். விக்கிலீக்ஸ் வெளியிட்ட அமெரிக்க கேபிளில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெயலலிதா இலங்கைக்கு எதிராக ...

*14 ஆம் பக்கத் தொடர்ச்சி...*


எனவே, யதார்த்தபூர்வமான அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு இலங்கைக்கு கால அவ காசம் தேவைப்படுகிறது. எனவே, இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவை பேணிப்பாதுகாக்க கூடிய வகையில் "தமிழ்நாட்டின் சீமாட்டி"யை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வது இந்தியாவின் பொறுப்பாகும். இலங்கை ஒரு சுயாதீனமான நாடு என்பதே இதற்கான காரணமாகும்.

உலகளாவிய ரீதியில் இலங் கைக்கு இருக்கும் மதிப்பை இந்தியா நன்கு அறிந்திருக்கிறது. எனவே நாம் நினைப்பது போன்று பேய் அந்தளவிற்கு கறுப்பாக இல்லை. அந்த தமிழ்நாட்டு சீமாட்டியும் இன்று அரசியலில் தாளிக்கப்பட்டு நல்ல அனுபவத்தை பெற்றிருக்கிறார்.

இந்த சீமாட்டிக்கு எது மாநில அரசியல் எது அகில இந்திய அரசியல் என்று பாடம் புகட்ட வேண்டிய அவசியமும் இல்லை. எதிர்க்கட்சியில் இருக்கும் போது அதிகாரத்திற்கு வருவதற்காக எதையும் சொல்வார்கள்.

ஆனால் அதிகாரத்திற்கு வந்த பின்னர் தாங்கள் சொன்னதை செய்வது அவ்வளவு எளிதான செயலல்ல. எனவே, தாம் பொது மேடைகளில் வெளியிடும் கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியமற்றவை என்பதை சீமாட்டி நன்கு உணர்ந்திருப்பார்.

# எம்.எல்.ஏ பதவியை ஏற்கச் சென்றவேளை தமிழக சுற்றுச்சூழல் அமைச்சர் உயிரிழந்தார்



(திருச்சி)

பெரம்பலூர் அருகே பாடாலூரில் நேற்றுக் காலை நடைபெற்ற விபத்தில் தமிழக சுற்றுச்சூழல் துறை அமைசசர் மரியம் பிச்சை ( வயது 60 ) பலியானார்.

தமிழக சட்டசபையில் நேற்று அனைத்து எம்.எல்.ஏ.,க்களுக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்படும் நேரத்தில் சட்டசபைக்கு புறப்பட்டு சென்ற அமைச்சர் விபத்தில் சிக்கி உயிரிழந்திருக்கிறார்.

காரில் சென்றபோது இந்த பரிதாபம் நடைபெற்றது.

பாடாலூர் பிரிவு அருகே, முன்னாள் சென்ற டிப்பர் மீது அமைச்சரின், கார் மோதியதால் விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது

திருச்சியில் இருந்து நேற்றுக் காலை 7 மணிக்குப் புறப்பட்ட அமைச்சர், காரின் இடதுபுற முன் இருக்கையில் அமர்ந்திருந்தார். விபத்தின்போது சம்பவ இடத்திலேயே பலியானார்.

விபத்திற்கு காரணமான டிப்பர் தப்பி ஓடி விட்டது. டிப்பரை முந்தும்போது விபத்து நடந்திருக்கலாம் என்று தெரிகிறது.

# ஜீப்பை மோதித் தள்ளியது ரயில் இருபது பேர் உடல் சிதறிப் பலி

(மதுபானி)

பாதுகாப்பற்ற ரயில் கடவையை கடக்க முற்பட்ட ஜீப் மீது, ரயில் மோதிய விபரத்தில் 20 பேர் உடல் சிதறிப் பலியாகினர்

பீகார் மாநிலம் மதுபானி மாவட்டம் பாரியா-பிஷயன்பூர் கிராமம் அருகே, நிஜாமுதின் எக்ஸ்பிரஸ் ரெயில் வேகமாக சென்று கொண்டு இருந்தது. அப்போது அங்கு உள்ள ஆள் இல்லாத ரெயில்வே கடவை வழியே, தண்டவாளத்தை கடக்க ஜீப் ஒன்று முயற்சி செய்தது. இதில், ஜீப் மீது ரெயில் பயங்கரமாக மோதியது.


இந்த விபத்தில் ஜீப்பில் இருந்த 20 பேர் உடல் சிதறி இறந்தனர். அவர்களில் 19 பேர் பெண்கள். மேலும் 4 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்களுக்கு வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. என்றாலும் அவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கிறது.

வீணா தேவி என்ற பெண் பஞ்சாயத்து தேர்தலில் வெற்றி பெற்றதை கொண்டாட, அவரது உறவு பெண்கள் ஜீப்பில் சென்ற போது, விபத்தில் சிக்கி விட்டனர். இறந்தவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ.1 லட்சமும், காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் வழங்க முதல்-மந்திரி நித்திஷ்குமார் உத்தரவிட்டு இருக்கிறார்.

விபத்து நடந்த இடத்தில் உள்ள ரெயில்வே கேட்டில் ஊழியர் ஒருவரை நியமிக்க ரெயில்வே துறையை நிதிஷ்குமார் கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

# பாகிஸ்தான் கடற்படைத்தளம் மீது தலிபான்கள் ஊடுருவித்தாக்குதல்

## 12 கடற்படையினர் பலி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள கடற்படை தளத்தில் தலிபான் பயங்கரவாதிகள் நேற்று இரவு தாக்குதல் நடத்தி 2 அமெரிக்கத் தயாரிப்பு ஹெலிகாப்டர்கள் உட்பட சில விமானங்களை செதப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் 5 பேர் கொல்லப்பட்டனர். அமெரிக்கப் படைகளால் அல்கொய்தா தலைவர் பின்லேடன் கொல்லப்பட்ட 3 வாரங்களுக்குப் பின்னர் இந்த பயங்கரவாத தாக்குதலை தலிபான்கள் நடத்தியுள்ளனர்.

பைசல் விமானதளத்துக்குள் உள்ள கடற்படை விமானநிலையமான பி.என்.எஸ் மெஹ்ரானில் 15க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கையெறி குண்டுகளை வீசியும், தானியங்கி துப்பாக்கிகளால் சரமாரியாக சுட்டும் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து பாதுகாப்புப் படையினருக்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நிகழ்ந்தது.

அந்த தளத்தில் இருந்து 15 முறை பலத்த வெடிச் சப்தங்கள் கேட்டதாக தகவல்கள் தெரிவித்தன. நேற்று முன்தினம்இரவு 10.40 மணிக்கு தொடங்கிய துப்பாக்கிச்சண்டை நேற்றுக் காலை வரை நீடித்தது.

இந்த தாக்குதலுக்கு தெஹ்ரீக் இ தலிபான் பாகிஸ்தான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. பின்லேடன் கொல்லப்பட்டதில் இருந்து பாதுகாப்பு நிலைகளின் மீதான தாக்குதல்களை இந்த அமைப்பு தீவிரப்படுத்தி வருகிறது.

பின்லேடன் உயிரிழந்த பின்னர் தாக்குதல் நடத்தப்போவதாக நாங்கள் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தோம். இதைவிடப் பெரிய தாக்குதல்களை நடத்துவோம் என வடமேற்கு பாகிஸ்தானில் ஒரு மறைவிடத்தில் இருந்து தலிபான் செய்தித் தொடர்பாளர் இசானுல்லா இசான் வெளிநாட்டு அமைப்புகளிடம் தெரிவித்தார்.

பி.என்.எஸ் மெஹ்ரான் கடற்படைத் தளத்துக்குள் அனுப்பப்பட்டவர்கள் அந்த தளத்தை 3 நாட்கள் முற்றுகையிடுவதற்கு தேவையானவற்றை எடுத்துச் சென்றுள்ளனர் என அவர் கூறினார்.

நிலைமையை கண்காணிக்குமாறு உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக்கை கராச்சிக்கு பிரதமர் யூசுப் ரஸா கிலானி அனுப்பியுள்ளார். அவர் கூறுகையில், 3 பக்கங்களில் இருந்து கடற்படைத் தளத்துக்குள் பயங்கரவாதிகள் புகுந்துள்ளனர் என்றார்.

அந்த தளத்துக்குள் ஒரு கட்டடம் இன்னும் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கிருந்து அவர்கள் வீரர்களை நோக்கி துப்பாக்கியால் சுடுகின்றனர். வீரர்கள் அதிக அளவில் உயிரிழக்காமல் பயங்கரவாதிகளை முழுமையாக தோற்கடிக்க முயற்சித்து வருவதாக ரஹ்மான் மாலிக் கூறினார்.

இது கடற்படை ஸ்தாபனத்தின் மீதான தாக்குதல் மட்டும் அல்ல, பாகிஸ்தான் மீதான தாக்குதல் என்றார் அவர். இந்த தாக்குதலில் 4 அல்லது 5 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் என அரசு தொலைக்காட்சியான பிடிவி தெரிவிக்கிறது

## உலகச் செய்திகள்



## முல்லா ஓமர் சுட்டுக்கொலை?

(இஸ்லாமாபாத்)

தலிபான் இயக்கத் தலைவர் முல்லாஓமர் பாகிஸ்தானில் சுட்டுக்கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தான் ராணுவத்தாக்குதலில் முல்லாஓமர் சுட்டுக்கொல்லப்பட்டதாக ஆப்கன் ரிவி மூலம் செய்திகள் வெளியாகி உள்ளன.

முல்லாஓமர் பாகிஸ்தானில் இருந்து வசரிஸ்தான் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது பாதுகாப்பு படையினர் சுட்டு வீழ்த்தியதாக கூறப்படுகிறது. இதனிடையே முல்லாஓமர் கொல்லப்பட்டதை பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் உறுதிப்படுத்தினார். முல்லா ஓமர் கொல்லப்பட்ட தகவல் சரியானதுதான் என்றார். அவர். எனினும் முல்லாஓமர் கொல்லப்பட்ட தகவலை தெஹ்ரீக் இதலிபான் அமைப்பு மறுத்துள்ளனர்.

# லண்டன் மீது பாரிய தாக்குதல் அல்கொய்தா அமைப்பு மிரட்டல்

(லண்டன்)

இங்கிலாந்து தலைநகர் லண்டன் மீது பெரிய அளவிலான தாக்குதலை நடத்தப் போவதாக அல்கொய்தாவின் புதிய தலைவர் சயீப் அல் ஏடெல் மிரட்டல் விடுத்துள்ளார்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டதை அடுத்து அவரது முதன்மை பாதுகாப்பு அதிகாரியான சயீப் அல் ஏடெல் அல்கொய்தாவின் தற்காலிகத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்பு அல்கொய்தாவின் மற்ற தலைவர்களுடனும், தலிபான் அமைப்பின் முக்கிய தலைவர்களுடனும் சயீப் அல் ஏடெல் ஆலோசனை நடத்தினார். பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் நடந்த இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் பின்லேடனை கொன்றதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக லண்டன் நகரை தாக்கி சீர்குலைக்குமாறு அல்கொய்தா தீவிரவாதிகளை சயீப் அல் ஏடெல் கேட்டுக்கொண்டார் என்று தலிபான் அமைப்பின் செய்தித்தொடர்பாளர் எசனுல்லா தெரிவித்தார்.

ஒட்டுமொத்த ஐரோப்பிய நாடுகளுக்கும் பிரிட்டன் தான் முதுகெலும்பாகத் திகழ்வதாக சயீப கருதுகிறார். லண்டன் மீது தாக்குதல் தொடுத்து சீர்குலைவை ஏற்படுத்திவிட்டால் ஒட்டுமொத்த ஐரோப்பிய கண்டமும் ஆட்டம் கண்டுவிடும் என்றும் அவர் நினைக்கிறார். இதனால் தான் லண்டனை தாக்கும் பாரிய திட்டத்தை அவர் வகுத்து வருகிறார் என்றும் எசனுல்லா குறிப்பிட்டார்.

லண்டன் மீது தாக்குதல் நடத்தப் போவதாக அல்கொய்தா எச்சரிக்கை விடுத்ததை அடுத்து நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. லண்டனில் எத்தகைய சவாலையும் எதிர்கொள்ள தயாராக இருக்கும்படி பாதுகாப்பு வீரர்களை அந்நாட்டு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

2008ல் மும்பையில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியது போல லண்டனில் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தக் கூடும் என்று பிரிட்டன் கருதுகிறது.

இதனால் ஓடும் ரயில்கள், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்கு பாதுகாப்பில் ஈடுபடும் வீரர்கள் எந்த நேரத்திலும் நவீன ஆயுதங்களை கையாள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



## குறள் சொல்லும் கதைகள் -42

### இன்பத்துப் பால்

# தொடர்பு

வித்தியா வீட்டுக்கு வந்த போது அவளது மாமனாரானவரதராஜன் அவளது வீட்டில் இருந்தார். இவள் என்னுடைய சொல்லைக் கேட்கிறாளில்லை. போற இடமும் சொல்வதில்லை. வீட்டுக்கு நேரம் பிந்தி வாறாள். படிப்பு முடிந்து விட்டது பிறகெங்கை போறாள் நீங்கள் தான் கண்டிக்க வேண்டும். வித்தியாவின் தாய் இலட்சுமி துக்கத்துடன் சொன்னாள்.

நீ உலகம் தெரியாத பெம்பிளையாய் இருக்கிறாய். இப்ப ஆண், பெண் என்ற பேதம் இல்லை படித்தவர்களுக்கு ஆயிரம் பிரச்சினைகள் வெளியே இருக்கும். முன்னைய காலத்தைப் போலப் பெண்களை வள்ர்க்க வேண்டுமென்று நீ நினைத்திருந்தால் அவளை நீ படிப்பித்திருக்கக் கூடாது. படித்தால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கத் தான் வேண்டும். என்றார் வரதராசா.

நீங்கள் அவளைக் கண்டிப்பீகள் என்று நினைத்துச் சொன்னால், நீங்கள் அவளுக்கு ஆதரவாகக் கதைக்கிறீர்கள் இனிமேலும் என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. கெதியாய்க் கல்யாணத்தை முடித்து வையுங்கோ..

வித்தியாவுக்கு தலையில் இடி விழுந்ததைப் போல இருந்தது. இரண்டு தினங்களுக்கு முன்பு வித்தியாவை கொழும்புக்குக் கூட்டி வரப் போகிறேன். என்று தொலைபேசியில் சொன்னவர் இன்று வந்திருக்கிறார். ஒரு வேளை என்னைக்கூட்டிச்சென்றால் அவளுக்குப் பயமாக இருந்தது.

கஜேந்திரனுக்குச் சொன்னால் சிரிப்பார். அலட்டுவார். இதைத்தவிர அவருக்கு எதுவும் தெரியாது வித்தி, உடம்போடு உயிருக்கு உள்ள தொடர்பானது எப்படிப்பட்டதோ அப்படிப்பட்டது. தான் உனக்கும் எனக்கும் உள்ள தொடர்பு உடலை விட்டு உயிர் பிரிந்தால் தான் நான் உன்னை விட்டுப் பிரிவேன். எமக்கு ஏழு பிறப்பு உண்டென்று சொல்கிறார்கள். அந்த ஏழு பிறப்பிலும் நீர் தான் எனக்குத் துணையாதல் வேண்டும். உணர்ச்சிப் பெருக்குடன் கஜேந்திரன் சொன்னது அவளது காதில் ஒலித்தது.

என்னம்மா யோகிக்கிறாய். மாமி இறந்த பின்பு நான் நிம்மதியில்லாமல் தவிக்கிறேன். என்னால் முன்பு போல ஓடியாடித் திரிய முடியவில்லை. உனது மாமி என்னையும் அங்கஜனையும் குழந்தைப் பிள்ளைகளை வளர்ப்பதைப் போல வள்ர்த்து விட்டா. இப்ப எம்மால் இயங்க முடியவில்லை. வைத்தியனான அங்கஜன் ஆஸ்பத்திரி வேலைகளைச் சேய்யவே சிரமம்படுகிறான். அவனுக்கு தாய் விதம் விதமாகச் சமையல் பண்ணிக் கொடுத்து விட்டார். எனது சமையல் அவனுக்குப்பிடிப்பதில்லை. ஒரே பிரச்சினை. நீயும் அம்மாவும் அங்கை வந்திருங்கோ. முன்பு பலமுறை கேட்ட போது படிப்பைக் காரணம் காட்டினாய். இப்ப படிப்பு முடிந்து விட்டது. வரதராஜன் கதைத்துக் கொணடிருந்தார். வித்தியாவுக்குத் தலை சுற்றியது.

ஒரு பெண்ணுக்குத் தான் விரும்புபவன் தான் உலகில் உயர்ந்தவன். படிப்பும் பட்டமும் பொருளாதாரமுமா எமக்கு நிம்மதியைத் தருவது கஜேந்திரனுடன் கதைத்துக்கொண்டிந்தால் சொர்க்கத்தில் இருப்தைப்போல இருக்கும். என்று நினைத்தாள் வித்தியா.

என்னம்மா யோசிக்கிறாய்? போய் முகத்ரைக் கழுவி விட்டுச் சாப்பிடு வித்தியா மெல்ல நகர்ந்தாள்.. அங்கஜனுக்குப் பக்கத்தில் உள்ள வீட்டில் சாப்பாடு ஒழுங்கு செய்து விட்டு வந்தனால் இரண்டொரு நாட்களில் நான் போக வேண்டும். என்னுடன் நீங்கள் வந்தால் சந்தோசப்படுவன். இல்லா விட்டால் நீங்கள் எப்போது வர .வசதியோ அப்போது வாருங்கள் என்றார் வரதராசா.

எங்களுக்கு இங்கு என்ன வேலை நான் உங்களுடன் வருகிறேன். என்றரள் இலட்சுமி.

வித்தியா அதிர்ந்து போனாள். கஜேந்திரன் கூறியது போல என்ன சாட்டுச் சொல்வது எதையும் யோசிக்க முடியாது தவித்தாள் வித்தியா.

அன்பே உன்னை என்னால் மறக்க முடியாது. உடம்போடு உயிருக்குள்ள தொடர்பு போன்றது. தான் எனக்கும் உமக்கும் உள்ள தொடர்பு நீர் இல்லையென்றால் நான் அன்றே இறந்து விடுவேன். கஜேந்திரன் சொன்னது வித்தியாவின் காதில் ஒலித்தது. அன்பேநீங்கள் இல்லாத உலகில் நான் வாழ்வேனா..? வித்தியாவின் உதடுகள் முணுமுணுத்தன.

**கே.வி.குணசேகரம்**

**உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன**
**மடந்தையொடு எம்மிடை நட்பு. 1122.**

இவளுக்கும் எனக்கும் உள்ள உறவானது உடம்போடு உயிருக்குள்ள உறவு எப்படியானதோ அப்படியானது.

# கனிமொழி கைதுடன் அம்மணமாக்கப்பட்டுள்ள தி.மு.க!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சவப்பெட்டி மீது இன்னொரு ஆணி அடித்தாகி விட்டது..

தேர்தல் முடிவுகளால் உள்ளாடைகளுடன் நின்றிருந்த தி.மு.க கனிமொழி கைதுடன் அம்மணமாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் 3 ஆவது இடத்தைப் பிடித்த தி.மு.க தொடர்ந்து அதே நிரந்தர இடம் தானா என கருணாநிதியை சிந்திக்க வைக்கும் அளவுக்கு சம்பவங்கள் நடந்தேறி வருகின்றன..

பழம்பெருமை வாய்ந்த திராவிடக் கட்சி என (தங்களை தாங்களே) கூறிக்கொள்ளும் தி.மு.க.வின் எதிர்காலமே சூனியமாக காணப்படுகிறது.

நெருப்பாறுகளைக் கடந்து தி.மு.க முடி சூடும், கனிமொழி கைதால் திமுகவிற்கு பாதிப்பில்லை என வீரமணி போன்ற கைப்பிள்ளைகள் கொமடி பண்ணினாலும், இந்த அதிர்ச்சிகளை கடந்து மீண்டு வர குறைந்தது 2 ஆண்டுகள் ஆவது தேவை .



சரியாக சொல்வது என்றால் தாங்கள் விதைத்த வினைகளை அறுவடை செய்யும் காலப்பகுதியில் கருணாநிதி அண்ட்கோ இருக்கின்றனர்..

திராவிட முன்னேற்றக்கழகம் என்று இருந்த திமுகவை (திருக்குவளை முத்துவேலர் கருணாநிதி) கம்பெனியாக மாற்றியதுக்கான பலாபலன்களை தீவிரமாக அறுவடை செய்து கொண்டு இருக்கிறார் தமிழின காவலர் (???) கருணாநிதி.

மானே மயிலே, உயிரே மயிரே, ஜயகோ, நெஞ்சு பொறுக்கலையே போன்ற பராசக்தி பாணி வசனங்கள் தனது தொண்டனிடத்தில் கூட வொர்க் அவுட் ஆகாததைப் பார்த்து சித்தம் கலங்கி இருப்பார் கருணா.

தேர்தல் முடிவுகளால் திருடர்கள் என முத்திரை குத்தப்பட்ட கருணா அண்ட் கோ நீதிமன்றத் தால் மீண்டும் ஒருமுறை ஊழல் வாதிகளாக முத்திரை குத்தப்பட்டுள்ளனர்.

ஒரு குடும்பத்தால் ஒரு ஜனநாயக நாட்டுக்கு 1 .76 இலட்சம் கோடி இழப்பை ஏற்படுத்த முடியும் என்றும் (ஏறத்தாழ 5 இலட்சம் கோடி ரூபாய் இலங்கைப் பணம்), இழப்பை ஏற்படுத்தியோர் படை பரிவாரங்கள் புடை சூழ அதிகாரத்துடன் உலா வர முடியும் என்றும் காட்டியது திருக்குவளை முத்துவேலர் கருணாநிதியின் ஆட்சிக்காலம்.

இந்த தேர்தலில் தோல்விக்கு பெரும் காரணமாக அமைந்தது ஸ்பெக்ட்ரம்.

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார் என பாட்டிமார் கதை சொல்ல ஆரம்பித்தாலே அது ஸ்பெக்ட்ரம் ராஜாவா என பேரப்பிள்ளைகள் கேட்கும் அளவுக்கு திமுகவின் மானம் சந்தி சிரித்தது உலகறியும்...

ஸ்பெக்ட்ரம் என்பதை வெறும் பத்தோடு பதினோராவது ஊழலாகப் பார்ப்பதைத் தவிர்த்து இது ஒரு நாட்டின் ஜனநாயகத்தை ஆட்டம் போட வைத்த காரணியாக பார்க்க வேண்டும்.

1. 76 இலட்சம் கோடி என்பது இந்தியா போன்ற ஏழைகளின் தேசத்திற்கு மிக பெரிய பணம்.

இப்பணம் இலங்கை போன்ற சிறிய தேசத்தின் ஒரு வருட உள்நாட்டு வருமானம், உத்தரப்பிரதேசம் போன்ற பெரிய மாநிலத்தின் ஒருவருட மொத்தத்தேசிய உற்பத்தி வருமானம்.

இந்தப் பணத்தினை வைத்து சகல வசதிகளும் உடைய ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் கட்டலாம்..

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் கட்டலாம்.. இலட்சக் கணக்கான மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கலாம்.. எவ்வளவு பெரிய பகல் கொள்ளை இது..

ஆனால் திருடியவர்கள் ஜாலியாக முரசொலியில் கவிதையும் உடன் பிறப்புகளுக்கு கடிதமும் எழுதிக்கொண்டு இருக்கலாம் என்றால் ஒரு சராசரி தேசப்பற்றுள்ள குடிமகனுக்கு ஜனநாயகத்தின் அதன் அஸ்திவாரம் மேலே அவநம்பிக்கை வராதா?

வெறும் ஐந்து ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கும் அரசாங்க உழியர்களுக்கே சுமார் ஐந்து ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்ககூடிய அதிகாரம் படைத்த இந்திய நீதித்துறை இந்த கொடிய கொலைக்கு குறைந்தது ஆயுள் தண்டனை கொடுக்க கூடாதா..?

ஊர் கூடி கிடாய் வெட்டியவனை விட்டு விட்டு இரத்த வறை சாப்பிட்டவனை பிடித்தது போல, கருணாநிதி அண்ட் கோவால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட மாபெரும் ஊழலுக்கு பலிக்கடா ஆக்கப்பட்டார் ராஜா.

இங்கு ராஜாவை குற்றம் அற்றவர் எனக் கூற முற்படவில்லை...

ஆனால் அவ்வளவு பெரிய தொகையை தனி ஒருவரால் அபேஸ் பண்ணி இருக்க முடியாது என் பது சிறு குழந்தைக்கும் தெரிவியும்.கனிமொழி கைது காலம் தாழ்த்திய ஒன்று...

கிரிமினல் குற்றம் சாட்டப்பட்ட பின்பும் ஒரு அமைச்சர் இரண்டு ஆண்டுகள் அமைச்சராக இருந்துள்ளார் என்பது எந்த ஜனநாயக தேசத்தில் சாத்தியம்? இலங்கையில் அப்பாவி தமிழ் மக்கள் கொலையுண்டபோது கை கொட்டி வாய் பொத்தி கவிதை எழுதிக் கொண்டிருந்த கருணாநிதி, சிபிஐயின் குற்ற பத்திரிகையில் கனிமொழியின் பெயர் சேர்க்கப்பட்ட போது முதன் முறையாக வெகுண்டு எழுந்தார்...

தி.மு.க பொதுச்சபையைக் ஒன்று கூட்டினார்...

அங்கே கனிமொழி குற்றம் அற்றவர் என தீர்மானம் நிறைவேற்றினார். திருடியவர்களே ஒன்று கூடி கூட்டம் போட்டு திருட்டு நடக்கவில்லை என சாதிப்பது உலகில் முதன் முறையாக இருக்கும்.

ஆனால் இதே கருணாநிதி ஈழம் பற்றி எரிந்து கொண்டிருந்த போது மன்மோகன் சிங்கிற்கு கடிதம், சோனியாவிற்கு காதல் கடிதம், மனிதச் சங்கிலிப் போராட்டம் என காமடி பண்ணிக் கொண்டிருந்தார்...

கொமடியின் உச்சமாக அவர் நிகழ்த்திய காலை உணவுக்கும் மதிய உணவுக்கும் இடையிலான உண்ணாவிரதம் வடிவேலுவின் வின்னர் பட கொமடிகளை மிஞ்சியது வரலாறு.

ஆனால் இவருடைய காமடிகளால், கபட நாடகங்களால் நாதியற்றுப் போய் செத்து போன ஈழ தமிழர்கள் எத்தனை பேர்?

அடுத்தடுத்த குத்துகளால் சித்தம் கலங்கி இருக்கும் தமிழின காவலருக்கு அவரின் எதிர் காலம் தொடர்பாக தர விரும்பும் சில தெரிவுகள் -

1. அரசியலை துறந்து முழு நேர சினிமா பணியாளராகி விடலாம்...

2. தி.மு.க.வை தேதிமுகவுடன் இணைத்து விட்டு தனது தலைவன் விஜயகாந் என உடன்பிறப்புக்களுக்கு அறிவித்து விடலாம்...

3. கடிதம் எழுதுவது எப்படி என அறிவாலயத்தில் ரியூசன் கொடுக்கலாம்...

4. கனிமொழி எனக்கு பிறக்கவில்லை என அறிவித்து விடலாம்...

5. தொழில் முறை ஊழல் செய்வது எப்படி என நூல் எழுதலாம்...

6. ஈழத் தமிழருக்கு ஈழம் பெற்றுக் கொடுப்பது எப்படி எனும் நகைச்சுவை விவாத மேடைகள் நடத்தலாம்...

7. எவ்வளவு அடிச்சாலும் தாங்குவது எப்படி என (Personality development course) எடுக்கலாம்.. இனி கருணாநிதி அண்ட் கோவை அந்த ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது..

அருளினியன்

# ஜெயலலிதா இலங்கைக்கு எதிராக செயற்படமாட்டார் அதற்கான அதிகாரமும் அவரிடமில்லை...



வீ. ராஜன்

இலங்கையைப் பற்றி தமிழ் நாட்டின் அரசியல்வாதிகள் தெரிவக்கும் கருத்துக்கள் பேச்சளவிலேயே இருக்கின்றதே ஒழிய உண்மையில் நன்மை ஏற்படுத்தவில்லை. அத்துடன் தங்கள் விருப்பத்தை மற்றவர்களுக்கு வலியுறுத்தக்கூடிய வகையில் இவர்கள் நடந்து கொள்கிறார்கள்."

இலங்கை தொடர்பான ஒரு கட்டுரையில் இந்து பத்திரிகை இவ்வாறு கூறியுள்ளது.

"எவ்வாறாயினும் ஒரு நாட்டின் அரசாங்கம் தனது நாட்டில் இடம் பெற்ற மாநில தேர்தல் வெற்றி தோல்விகளை அடிப்படையாக வைத்து இன்னுமொரு நாட்டுடன் அரசியல் தொடர்பினை வைப்பதிலலை. இந்தியா இலங்கையின் மத்திய அரசாங்கத்துடன் மாத்திரமே பேசுகிறது.

இதனால்தான் ஜெயலலிதா தமிழ்நாட்டு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தாலும் அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் அந்தளவிற்கு பொருட்படுத்துவதற்கான அவசியம் ஏற்படாது. இலங்கை பயங்கரவாத யுத்தத்தில் வெற்றி அடைவதற்கு இந்திய அரசாங்கத்தின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைத்தமை குறித்தும் சர்ச்சை இல்லை.

இலங்கைக்கு ஆதரவாக இந்தியா இருந்த காரணத்தினால் தான் குறிப்பாக அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் இலங்கை விடயத்தில் அநாவசியமாக தலையிடுவதை தவிர்த்துக் கொண்டன. இதற்கு மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இந்தியாவுடன் நட்புறவான முறையில் நடந்து கொண்டதும் ஒரு முக்கிய காரணமாகும்.

அன்று வடமராட்சி போர் முன்னேற்றமடைந்திருந்த காலகட்டத்தல் ரஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தனவிற்கு இவ்வாறு கூறினார். "உங்களுடைய இராணுவ முயற்சி பலனளிக்காது". அதற்கு பின்னரே பருப்பு மூடைகளை விமானங்கள் வட பகுதியில் பரசூட்கள் மூலம் இறக்கின.

இந்த தடவை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அப்படி கூறவில்லை. என்றாலும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அப்போதைய பாதுகாப்பு ஆலோசகர் என்.கே நாராயணன், அப்போதைய வெளிவிவகார செயலர் சிவசங்கர் மேனன் மூலம் என்ன தகவலை அனுப்பி வைத்தார் என்பது எங்களுக்கு தெரியாது.

ஆயினும் இலங்கை இராணுவம் வெற்றி வாகை சூடி எல்.ரி.ரி.ஈ.யை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. இங்குதான் இந்த வித்தியாசத்தை நாம் காணுகிறோம். இதற்கான பிரதான காரணம் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கு மிடையில் வலுவூன்றியிருந்த நட்புறவேயாகும்.

இதேவேளையில் இலங்கை பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படுத்த வேண்டுமென்ற அழுத்தங்களை இலங்கை மீது கொண்டு வர வேண்டிய அவசியம் இந்தியாவற்கு இருந்தது. இத்தகைய நிலைப்பாட்டை இந்திய அரசாங்கம் எடுப்பது தமிழ்நாட்டையும் திருப்தப்படுத்துவதற்காகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அது போன்றே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார். எல்.ரி.ரி.ஈ.யுடன் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்திலும் ஜனாதிபதி இதே நிலைப்பாட்டையே கடைப்பிடித்து வந்தார்.

இது விடயத்தில் அரசாங்கத்தினதும் ஜனாதிபதியின் நிலைப்பாடும் தெளிவாக இருக்கிறது. என்றாலும் அதனை நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் தேவை. மற்றவர்களின் அவசரத்திற்காக அதனை செய்து முடிக்க இயலாது. 50 ஆண்டுகளுக்கும் கூடுதலாக நிலைத்திருக்கும் இனப்பிரச்சினை தொடர்பாக 30 ஆண்டுகால யுத்தம் முடிவடைந்து இப்போதுதான் 2 ஆண்டு காலம் கடந்துள்ளது. அவசரப்பட்டு தீர்வுகளை ஏற்படுத்திகையை காயப்படுத்த அனுபவம் மிகக ஒரு தலைவர் விரும்பமாட்டார்.

எதனையும் அவசரப்பட்டு செய்து முடிக்க இயலாது. தமிழ் தேசிய கூட்டணியுடனும் ஏனைய தமிழ், சிங்கள அரசியற் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாட்டுக்கு வர முடியும்.

13 ஆவது அரசியலமைப்புக்கு மேலதிகமாக செல்வதன் அவசியம் அரசியல் வட்டாரங்களில் பரவலாக பேசப்படுகிறது. 13வது திருத்தச் சட்டம் இப்போதும் அரசயல் சாசனத்தில் ஓர் அங்கமாக இருந்து வருகின்றது. இதற்கமைய தீர்வைக் காண்பதற்கு ஜனாதிபதி மகிந்த கடப்பாட்டை கொண்டுள்ளார்.

அது போன்றே இந்திய மத்திய அரசாங்கத்திற்கும், தமிழ் நாட்டின் அரசியல்வாதிகளுக்கும் அரசியல் தீரவை துரிதமாக ஏற்படுத்த வேணடுமென்ற விருப்பம் இருக்கிறது.

இப்போது அவர்கள் விடுத்து வரும் கருத்துக்களும், அறிக்கைகளும் இதற்கான அழுத்தங்களாக இருக்கலாம். தருஸ்மன் அறிக்கையும் அரசியல் தீர்வை விரைவில் ஏற்படுத்துவதற்கான ஒரு அழுத்தமாகவே இருக்கிறது. ஒவ்வொரு யுத்தத்திலும் மனித உரிமைகள் மீறப்படுவது சகஜமே. இது ஒவ்வொரு நாட்டிலும் யுத்த காலத்தில் நடைபெறுவதுண்டு. தமிழ் நாட்டுக்கும் இது பற்றி தெரியும்.

இதேவேளை இந்திய அரசியல் அமைப்பைவிட சற்று உயர்வான அதிகாரப் பரவலாக்கலை அல்லது புலிகளின் அபிலாஷைகளை ஈடு செய்யக்கூடிய வகையில் இந்தியா செயற்படத்தயாராக இருக்கிறதென்று நாம் எவ்விதத்திலும் நினைக்க முடியாது. இலங்கையை பிளவுபடுத்தும் ஒரு தீர்வு இந்தியாவினாலும் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாததே இதற்கான காரணமாகும்.

இப்படி நடந்தால் இந்தியாவில் உள்ள பிரிவினை வாதிகள் இதனைக் கடைப்பிடித்து நன்மையடைய எத்தனிப்பார்கள். இதே வேளையில் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் புதிய அரசியல் செயற்பாடுகள் குறித்தும் இந்திய மத்திய அரசாங்கம் அவதானமாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் ஒரு பெரும் குழப்ப நிலையை ஏற்படுத்தி இலங்கையை மறந்து விடுவதற்கும் இந்திய அரசாங்கம் தயாராக இல்லை. இது பற்றி நல்ல அனுபவம் இலங்கைக்கும் இல்லாமலில்லை.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# சம்பள முரண்பாட்டை நீக்க ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கும் முயற்சியாக ஜனாதிபதியுடனான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது. இச்சந்திப்பு சுமூகமான முறையில் இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான வேதன முரண்பாட்டை உரிய முறையில் தீர்க்காத பட்சத்தில் பல விரிவுரையாளர்கள் வெளி நாடுகளுக்குச் செல்லத்தயாராக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், சில விரிவுரை யாளர்கள் சில நாடுகளிடம் தமது கோரிக்கையை முன்வைத்துள்ளதாக சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் மஹிம் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதிக்கும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் இடையில் நேற்றுப் பிற்பகலில் சந்திப்பொன்று இடம்பெற்றது



அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்த சந்திப்பிற்கு தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளன ஊடகப்பேச்சாளர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட சில விரிவுரையாளர்களை மாத்திரம் அழைத்து குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும், அந்த கலந்துரையாடலின் போது தம்மால் கோரப்பட்ட வேதன கொடுப்பனவு பெற்றுக்கொடுக்கப்படுமானால், தன்னிச்சையான பதவிவிலகல் தொழிற்சங்க போராட்டத்தை நிறைவுறுத்த தயாராகவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுவர் சுற்றுலா விசாரணை ஆரம்பம்

உரிய நடவடிக்கை மேற்கொள்ளாது 13 இலங்கைச் சிறுவர்களை வெளிநாட்டுக்கு சுற்றுலாப் பயணம் அனுப்பிவைக்க முயற்சித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பெண்ணொருவருக்கும் இந்த முயற்சியுடன் தொடர்பு இருப்பதாகவும் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, சுனாமி கிராமச் சிறுவர்களை இவ்வாறு உரிய நடவடிக்கையின்றி வெளிநாட்டு சுற்றுலாப் பயணத்திற்கு அனுப்ப முயற்சித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

உரிய நடைமுறையினை பின்பற்றாதும் பெற்றோரது அனுமதியை பெறாதும் ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்குச் சிறுவர்கள் செல்லும் போது சிறுவர் துஷ்ப்பிரயோகங்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தீவிர விசாரணைகளை தற்போது மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.க.காரியாலயம் அடித்து நொருக்கப்பட்டது

(கொழும்பு)

நிந்தவூர் பிரதான வீதியில் கடந்த 14ம் திகதி புதிதாக திறக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் கிளைக் காரியாலயத்தினை இனம்தெரியாத குழுவினர் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியவில் தாக்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த தாக்குதலில் எவருக்கும் காயம் ஏற்படாத போதும் கிளைக்காரியாலய உடமைகளுக்கு பாரிய அளவு சேதம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசிய கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் தயா கமகே கடந்த 14ஆம் திகதி குறித்த கிளைக் காரியாலயத்தை திறந்துவைத்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பர்தாவுக்கு தடைவருமா சுவிற்சர்லாந்து வாக்கெடுப்பு

(கொழும்பு)

பர்கா அணிவதனை அனுப்பதிப்பதா அல்லது தடை செய்வதா என்பது தொடர்பில் ரிக்கினோ கான்டனில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. புர்கா அணிவதனை தடைசெய்ய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமெனக் கோரி பத்தாயிரம் கையொப்பங்கள் திரட்டப்பட்டுள்ளன. இந்த கையொப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. குறித்த கான்டனில் வாக்கெடுப்பு வெற்றி பெறுமாயின் அது ஏனைய கான்டன்களுக்கும் பரவலாக்கப்படலமெனஎதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே சுவிற்சர்லாந்தில் முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் மினாரத் கட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த வாக்கெடுப்புக்கு ஆதரவாக 58 சதவீதமானவர்கள் வாக்களித்ததையடுத்து தற்போது சுவிற்சர்லாந்தில் மினாரத் கட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சுவிற்சர்லாந்தில் அதிகளவிலான இளைஞர், யுவதிகள் புனித இஸ்லாத்தை ஏற்றுக கொண்டுவருவதால் அது தமது நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுதத்தலாக அமையுமென உளவுத்துறையினர் அரசாங்கத்தை எச்சரித்துள்ளதாகவும் தகவல்கள் வெளி யாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சரிந்துவரும்...

சங்கரி. கொழும்பிலிருந்து வெளியாகும் 'த நேஷன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவுசெய்யப்பட்டது மக்களால் அல்ல, புலிகளால் என்பதை அரசு தெரிந்துகொள்ள வேண்டும். அந்தப் பாதிப்பின் மிச்சமே இன்னமும் இருக்கிறது.

வடக்கில் பல நிலங்களை அதன் உரிமையாளர்கள் அந்நேரத்தில் புலிகளின் அச்சுறுத்தலினால் அவர்களுக்கே விற்றுவிட்டு வெளியேறினார்கள். இப்போது அந்த நிலங்கள் அரசாங்கத்துக்குரியவையாகியுள்ளன. இது சரியா? கூட்டமைப்பினர் ஏன் இந்தப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதில்லை? என்றும் அப்பேட்டியில் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

## யாழ்.சிறைக்...

செய்த மேல் நீதிமன்றம் தகுந்த ஆதாரங்கள் இல்லையென வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

ஆனால் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து கைதிகளின் விடுதலை தொடர்பான தேவையான ஆவணம் வராமையால் தொடர்ந்தும் சிறையில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தங்களை உடன் விடுவிக்குமாறு கோரியுமே இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை குறித்த கைதிகள் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யுத்த...

"சீனா பொலி டெக்னோலஜி" மற்றும் "சீனா தொழிநுட்ப கூட்டுத்தாபனம்" ஆகிய நிறுவனங்களே அனுசரணை வழங்க முன்வந்துள்ளன என்றும் அவற்றின் தயாரிப்புக்களே காட்சிப்படுத்தப்படவுள்ளன என்றும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

சீனா தொழிநுட்ப கூட்டுத்தாபனமானது செய்மதித் தொலைத்தொடர்பாடல் மற்றும் ராடர் தொழில் நுட்பம் போன்றவற்றில் சிறப்பு தேர்ச்சி பெற்ற நிறுவனமாகும். இந்த நிறுவனம் விஞ்ஞான ஆராய்ச்சி, தொழிநுட்ப அபிவிருத்தி, செய்முறை வடிவமைப்பு, தொலைக்கட்டுப்பாடு மற்றும் தொலைத்தொடர்புகள் போன்றவற்றில் கடமையாற்றி வருகின்றது.

யுத்த வெற்றியின் அனுபவத்தினை உலக நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளும் பொருட்டே இந்த கருததரங்கினை இராணுவம் ஏற்பாடு செய்துள்ளது. இதில் அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் உட்பட 42 நாடுகளின் தூதுக் குழுவினர் பங்குபற்றவுள்ளனர். அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவினால் முன்வைக் கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் களுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யபபடவில்லை என்றும்,

இலங்கை இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள நிபுணர்குழு, உண்மைத்தன்மையை அறிந்துகொள்வதற்காக இந்த கருத்தரங்கில் கலந்துகொள்ள முடியும் என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

## துப்பாக்கி...

பகுதியில் உள்ள குளக்கரையில் உள்ள மரமொன்றின் கீழ் புதைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட 25 ரவைகள் மீட்கப்பட்டதாகவும் இவற்றுள் 15 ரவைகள் துருப்பிடித்திருந்ததாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

மிகுதி ரவைகள் பெரிய தம்பனைக்குளம் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

# கர்நாடக இசைவிழா கலைஞர்களின் சங்கமம்

வடமாகாணத்தைச் சேர்ந்த 250 இற்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்களுடன், கர்நாடக இசைப் பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சுப்பிரமணியம் பூங்காவுக்கு எதிராகவுள்ள யாழ்.மாநகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு திணைக்களத்தின் பணிப்பாளர் ஸ்ரீதேவி தலைமை தாங்கினார்.

பிரதம விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ் மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார், இந்தியத் துாதரகத்தின் யாழ்.கிளை அதிகாரி வி.மகாலிங்கம் மற்றும் இலங்கை சின்மயாமிஷன் யாழ்ப்பாணத்தின் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத் சைத்தன்யா ஆகியோர கலந்துகொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் தவில், நாதஸ்வரக் கச்சேரி, வாத்தியக் கச்சேரி, பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் என்பன நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து மூத்த கலைஞர்களுக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி விருதுகள் மற்றும் சான் றிதழ்களை வழங்கிக்கௌரவித்தார்.




## கைதடியில்...

இச்சம்பவத்தின்போது படுகாயமடைந்தார். இவர் சிகிச்சையின் பொருட்டு நேற்றுக் காலை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு, சாவகச்சேரிப் பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் குறித்த இளைஞர் கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவத்துறை பெண்கள் விடுதியினுள் யாருக்கும் தெரியாது நுழைந்திருக்கின்றார். இதன்போது விடுதியில் குறித்த இளைஞரின் நடமாட்டத்தை விடுதியில் இருந்தவர்கள் அவதானித்து அருகில் கடமையில் இருந்த படையினருக்குத் தகவல் கொடுத்தனர்.

உடனடியாகவே அப்பகுதிக்கு விரைந்த படையினர் விடுதியினைச் சுற்றி வளைத்தனர். அச்சமயம் குறித்த இளைஞர் விடுதியில் இருந்த கையடக்கத் தொலைபேசி ஒன்றை எடுத்துக்கொண்டு, விடுதியின் மதிலேறிப் பாய்ந்து வெளியேறிய போது, படையினர் அவரை நிற்குமாறு கேட்கவே அவர் ஓடத்தொடங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து படையினர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது அவரது இடது கையில் காயம் ஏற்படவே அவர் படையினரால் கைதுசெய்யப்பட்டதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், குறித்த இளைஞர் சம்பவ நேரம் மது அருந்தியிருந்ததாகவும், அவர் விடுதியில் இருந்து எடுத்து வந்த கையடக்கத் தொலைபேசியை இடைநடுவில் கைவிட்டுச் சென்றதாகவும் தெரியவருகின்றது. இச்சம்பவம் தொடர்பாக குறித்த இளைஞர் சாவகச்சேரி பொலிஸாரினால் சாவகச்சேரி நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

# இன ஒற்றுமை வேண்டி கிழக்கில் மாபெரும் பேரணி




(மட்டக்களப்பு)

அழகோறளைப்பற்று தெற்கு (கிராண்) பிரதேச செயலகத்துக்குட்பட்ட 18 கிராம சேவையாளர் பிரிவை இணைத்து தனியான பிரதேச சபையினை அமைத்து தருமாறு கோரியும், இன ஒற்றுமையினை வலியுறுத்தியும் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியும் நேற்று நடாத்தப்பட்டுள்ளது.

கிராண் சமூக பொருளாதார அபிவிருத்தி மன்றத்தினால் நடாத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்ட பேரணியானது முறக்கொட்டாஞ்சேனையில் ஆரம்பமாகி கிராண் சந்தி வரையில் இடம்பெற்றது.

கிராணில் வைத்து சங்கத்தின் சார்ப்பில் பிரதேச செயலாளருக்கான மகஜர் பிரதேச செயலக அதிகாரிகளிடமும், மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கான மகஜர் அதன் இணைப்புச் செயலாளர் பொன்.ரவீந்திரனிடமும், மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணத்திடமும் கையளிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பிரதேச சபையின் கீழ் உப பிரதேச சபையாக இயங்கிவரும் கிராண் பிரதேசசபையை முழுமையான பிரதேச சபையாக உறுவாக்கித் தருவதன் மூலம் இப்பிரதேசத்தில் உள்ள 18 கிராம சேவையாளர் பிரிவு மக்கள் நன்மையடைவார்கள் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.


அத்துடன் தமிழ் மக்களின் வயல் காணிகள் வலுக்கட்டாயமாக பிடிக்கப்படுவதை உடனடியாகத் தடுக்குமாறும் பலாத்காரமாக தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுத்துமாறும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

நூறுவீதம் தமிழ் மக்களைக் கொண்ட கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட 5 தமிழ் கிராமங்களை ஓட்டமாவடியுடன் இணைக்குமாறு கோரி நடாத்தப்பட்ட ஹர்த்தாலுக்கும் இங்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான செயற்பாடுகளில் சில அரசியல்வாதிகளும், சில கடும் அமைப்புகளும் இயங்கி வருவதாகவும், அவர்களின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கிராண் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பெருமளவிலான பொதுமக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

## தீப்பற்றியது மோட்டார் சைக்கிள்



(யாழ்ப்பாணம்)

நேற்று மானிப்பாயில் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பற்றி எரிந்தது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த கந்தையா மகேந்திரன் என்பவர் தெய்வாதீனமான உயிர் தப்பினார்.

தீயை எவரும் அணைக்காத நிலையில் மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியது.

## உழைக்கும்...

நேற்று முற்பகல் இடம்பெற்ற இவ்வைபவத்தில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

மேல் மாகாணத்தைச் சேர்ந்த 852 பேர் நேற்று பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறினர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டைப் பொறுப்பேற்கும் போது இருந்த பாரிய சவால் பயங்கரவாதத்திலிருந்து நாட்டைப் பாதுகாப்பதாகும். அந்தச் சந்தர்ப்பத்தில் உங்களைப் போன்ற இளைஞர்கள் நாட்டுக்காகச் செய்த பெரும் தியாகத்தினால் இன்று நாம் சுதந்திரத்தை அனுபவிக்கின்றோம்.

பயங்கரவாதத்தை வென்ற பின்னர் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்திய ஜனாதிபதி பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது இனி நாட்டைக் கட்டி எழுப்புவோம் எனக் கூறினார். அன்று முதல் நாட்டை பொருளாதார ரீதியில் கட்டி எழுப்பும் பணியில் அனைவரும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றோம்.

உலகில் முன்னேற்றம் அடைந்த நாடுகளுக்கு மத்தியில் எமது நாட்டைக் கட்டி எழுப்பும் சவாலை இன்று நாம் எதிர்கொண்டுள்ளோம்.

எமது நாட்டை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக மாற்றியமைக்க நல்லொழுக்கம் மிக்க சிறந்த உழைப்பாற்றல் கொண்ட படையணி ஒன்றே எங்களுக்குத் தேவை.

நாட்டின் அந்தத் தேவை இன்றைய இந்த தேசிய இளைஞர் படையணி மூலம் நிறைவேற் றப்படும். ஜனாதிபதியின் எதிர்பார்ப்பான நாட்டை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக மாற்றியமைக்கும் பணியின் முக்கிய பங்கு உங்கள் வசமே உள்ளது என அமைச்சர் மேலும் கூறினார்.

# இந்து – பௌத்த கலாச்சாரப் பேரவை யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இந்து, பௌத்த கலாச்சாரப் பேரவை முதன்முதலாக நேற்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இந்து, பௌத்த கலாசார பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள இல. 29 பழம் வீதி, கந்தர்மடம் பகுதியில் இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், வண. அத்துலரத்தின தேரர், நல்லை திருஞான சம்பந்த ஆதின குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமச்சாரிய சுவாமி, தென்பகுதி பௌத்த மக்கள், படைவீரர்கள், பொதுமக்கள் ஆகியோர் பெருமளவில் கலந்துகொண்டனர்.

# மண்டைதீவில் வீதி விபத்து இளைஞர் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு - அம்மன் வீதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி சேதமடைந்தன. அதில் பயணித்த இளைஞர்கள் மூவர் காயமடைந்தனர்.

மண்டைதீவைச் சேர்ந்த செல்வகுமார் பவீசன் (வயது 21), சத்தியசீலன் நிதர்சன் (வயது 18) ஆகிய இருவரும் மேலும் ஒருவரும் இச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

இவர்களில் இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்விபத்துச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சேதமடைந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை பொலிஸார் தடுத்துவைத்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இச்சம்பவத்தின்போது குறித்த விபத்தில் சிக்கிய இளைஞர்கள் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருக்கவில்லை எனவும், தலைக் கவசம் அணிந்திருக்கவில்லை எனவும் தெரியவருகின்றது. (பா,9

# அமெரிக்காவில் புயல்; 89 பேர் உயிர்ப்பலி!



(நியூயோர்க்)

அமெரிக்காவின் வடமேற்கு மாகாணமான மிசூரியில் (Mi ssou யில் நேற்று முன்தினம் இரவு வீசிய கடும் டோர்னாடோ புயல் காற்றில் சிக்கி 89 பேர் பலியாகியிருப்பதுடன், பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர்.

மிசூரி மாகாணத்தின் ஜோப்லின் நகரில் உள்ளூர் நேரம் மாலை 6.00 மணியளவில் இத்திடீர் டோர்னாடோ தாக்கியுள்ளது. இதில் அந்நகரில் உள்ள இரண்டு மருத்துவமனைகள், உயர் பாடசலை கட்டிடங்கள் உட்பட பல கட்டடங்கள் தேசமாகியுள்ளன.

கட்டிட இடிபாடுகளில், இன்னமும் பல நூற்றுக்கணக்கானோர் சிக்கியிருப்பதாகவும், அவர்களை மீட்கும் நடவடிக்கை தொடர்வதாகவும் ஜோப்லின் நகர பொலிஸ் தெரிவித்துள்ளது. இவ் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# அரசுக்கு எதிராக சுவரொட்டி ஜே.வி.பி உறுப்பினர்கள் கைது

(கொழும்பு)

ஜே.வி.பியின் முன்னாள் யாழ். மாவட்ட வேட்பாளர் உட்பட ஜே.வி.பி உறுப்பினர்கள் மூவர் நேற்று பிற்பகல் மன்னாரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சார சுவரொட்டிகளை ஒட்டியபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருட பொதுத்தேர்தலில் ஜே.வி.பியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட லலித் குமார உட்பட ஜே.வி.பி உறுப்பினர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஜே.வி.பியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# நெருப்பால் சுட்டார் தந்தை; சிறு பிள்ளைகள் இருவர் காயம்

## தியத்தலாவையில் சம்பவம்

(கொழும்பு)

தனது இரு பிள்ளைகளை நெருப்பால் சுட்டுக் காயப்படுத்தியதுடன் அக்காயங்களின் மீது மிளகாய்த் தூளை பூசிய தந்தையைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

எல்ல நாவில தோட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 6 வயது 7 வயதுடைய இரு சிறுவர்களே சூட்டுக் காயங்களுக்குள்ளாகி தியத்தலாவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இருவரின் கால்களிலும் கைகளிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

அரிசி வாங்குவதற்குக் கொடுத்த பணத்தில் அரிசியை வாங்கிவிட்டு மிகுதிப் பணத்திற்கு பணிஸ் வாங்கி இரு சிறுவர்களும் சாப்பிட்ட தற்காகவே இத்தண்டனையை தந்தை வழங்கியுள்ளார்.

பண்டாரவளை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் சிறுவர்களை மீட்டு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். இந்தச் சம்பவம் நடைபெற்றபோது தாயார் வேலைக்கு சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விருது சிறுவர்களும் தியத்தலாவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். சூட்டுக்காயத்தின் மேல் பாட்டி மிளகாய்த் துாளை தடவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எல்ல பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணை செய்து வருகின்றனர். தந்தையும், பாட்டியும் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பொலிஸார் மீது தாக்குதல் விசாரணைகள் துரிதம்

(கொழும்பு)

சிலாபம் காவல்நிலையத்தின் உத்தியோகத்தர்கள் மூவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக 2 விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்ட ஒருவரை கைது செய்வதற்காக சென்ற சிலாபம் பொலிஸார் மூவர் நேற்றிரவு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

சில காலமாக நீதிமன்ற உத்தரவை புறக்கணித்து வந்த ஒருவர் சிலாபம் உணவகம் ஒன்றில் இருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து பொலிஸார் அங்கு சென்றுள்ளனர்.

இதன்போது, கைது செய்யப்படவேண்டியவரினால், பொலிஸ் உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான பொலிஸாருள், உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதல் சம்பவத்துடன் உணவகத்தில் இருந்து மேலும் சிலரும் தொடர்பு பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் சம்பவத்தை அடுத்து சிலரால் உணவகத்திற்கு தீயிடப்பட்டுள்ளதாகவும், அருகில் கோழிப்பண்ணைக்கும் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தவிடயம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.